உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞாநஸம்பந்தகுருப்யோநம:

மெய்ஞ்ஞானபாநுவிகற்பவிளக்கம்

ஆகிய

# ஞாநசதுஷ்டயதர்ப்பணம்.

இஃது

ஸ்ரீ ல ஸ்ரீ

சோமசுந்தர நாயகரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை

வேதாகமோக்த சைவசித்தாந்த சபையாரால்

வெளியிடப்பட்டது.

**MADRAS:**

PRINTED AT THE MADRAS RIPON PRESS,

*316, Thumboo Chetty Street.*

1891.

விலை அணு-அ.

உ

சிவமயம்.

# விஷய அட்டவணை.


| பக்கம். | விஷயம். |
| --- | --- |
| க | காப்பு. முகவுரை. |
| உ | நூல். |
| கச | ஞானவிவரணம். |
| கரு | பிள்ளையார் உலகமுய்யவந்தவரென்பது. |
| கஎ | பிள்ளையார் பிறந்திறவாதவரென்பது. |
| கஅ | பிள்ளையார் பாசமில்லாதவரென்பது. |
| உ0 | பிள்ளையார் சிவகுமாரரென்பது. |
| உக | நம்பியாண்டார்நம்பி கூறியவை. |
| உங | திருத்தொண்டத்தொகை. திருப்புகழ். |
| உச | சிற்றம்பலநாடிகளருளியது. |
| ,, | சிவப்பிரகாசசுவாமிகளருளியது. |
| ,, | சிதம்பரசுவாமிகளருளியது. |
| உரு | திருவிளையாடற்புராணம். |
| உசு | சீகாழிப்புராணம். |
| உஎ | திருநெல்வேலிப்புராணம். |
| உஅ | உபமந்யுபக்தவிலாஸம். |
| ,, | ஹாலாஸ்யமாஹாத்மியம். |
| உகூ | காஞ்சிமாஹாத்மியம். |
| ௩0 | ஞானவிசாரம். |
| ௩உ | சிவஞானபோதம், பத்தாஞ்சூத்திரவிசாரம். |
| ௩ரு | ஒழிவிலொடுக்கச் சிறப்புப்பாயிரத்துரை. |
| சக | ஆசாரியபிரபாவம். |
| சஉ | ஞானவேள்வியைத்தெனல். |
| சங | காண்டத்திரயவிசாரம். |
| சஎ | இறைபணி ஈதெனவிளக்கல். |
| சஅ | சிவஞானபோதம், எட்டாஞ்சூத்திரகருத்துரை. |
| ,, | ஞானசதுஷ்டயநிரூபணம். |
| ,, | சிவஞானசித்தியார். |
| ,, | சிவஞானதீபம். |
| சகூ | சிவஞானயோகிகளருளியது. |


திருச்சிற்றம்பலம்.

உ.

சிவமயம்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத். |
|---|---|---|---|
| க | கரு | *வுரை | வுரை |
| கஉ | கஉ | டற்றேரு | மற்றொரு |
| உஉ | உஅ | என்னுந | என்னுங் |
| உஎ | உச | ரர | ரா |
| உகூ | கூ௦ | றகை | றுகை |
| ஙஉ | கஉ | ளிவர் | ளவா |
| ஙரு | கரு | னறே. | னறே |
| ,, | ஙக | இபங்க | இயஙக |
| ச௦ | உ | தணும் | தாணும் |
| சஅ | கரு | மூனிவர் | முனிவர் |

திருச்சிற்றம்பலம்.

*இவ்வாறு வருமிடங்கடோறும் படிப்பவர்கள் பார்த்துப்படித்துக் கொள்ளவும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜஞானஸம்பந்தகுருப்யோநம:

---

மெய்ஞ்ஞானபாநுவிகற்பவிளக்கம்

ஆகிய

# ஞானசதுஷ்டயதர்ப்பணம்.

## காப்பு.

"உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில்சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

---

## முகவுரை.

ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய பெரிய புராணத்தில், "சிவனடியே சிந்திக்கும்" என்னும் பாடலில், கேட்டல - சிந்தித்தல - தெளிதல - நிட்டை என்னும் நான்கு ஞானங்கள் பெறப்பட்டிருந்த முறைமையை யாம "ஆசாரியபிரபாவம்" என்னு நூலில் தெளிந்து பிரகாசப்படுத்தினேம. அதனைப்பார்த்த வொருவர் "ஞானம் நான்கென யாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை" என்று எமக்குக் கடிதம் வரைந்தார். அதற்குமேல், "ஞானபோதவிளக்கம்" என்றொரு சிறுநூல் யாம்வெளிப்படுத்தினேம. அதற்குமறுப்பாக ஞானம இரண்டே யென்று சாதித்து "ஞானபோதவிளக்கச்சூறாவளி - ஞானசூடாமணி - ஞானபோதவிளக்கமறுப்பு" என்னும் மூன்று சிறுநூல்கள் மூன்று கவிராயர்களால ஒன்றன்பின்னொன்றாக வெளியிடப்பட்டன. அவற்றுள், ஞானபோதவிளக்கச்சூறாவளிக்கு ஞானபோதத்தெளிவுரை, ஞானசூடா

மணிக்கு ஞானபேதத்துணிவும், ஞானபேதவிளக்க மறுப்புக்கு ஞானபேதவிளக்கநியாயரக்ஷாமணியும் மறுப்புகளாக மூன்றுநூல்கள் எம்மவர்பெயரால் வெளியிடப்பட்டன. அவ்வளவில் வாதம் முடிவாயிற்று. இங்ஙனமிற்க.

இப்போது மதுரைச்சங்கத்திலுள்ள வித்வானொருவரால் "மெய்ஞ்ஞானபானு" என்னுஞ் சிறுநூலொன்று வெளியாயிருக்கின்றது. அதி லதனையாக்கியோா ஞானம இரண்டா நான்கா எனவாசங்கித்து அடங்கிப்போனசண்டையை ஆரம பஞ் செய்தனா. இந்த நூலாசிரியர் இரண்டு ஞானத்தையும், நான்கு ஞானத்தையும் மறுக்கின்றனர். வேறு நாலு ஞானத்தை நடுவே கொண்டுவந்து நாட்டுகின்றனர். அவ்வளவினில்லாது வேறு குப்பைஞானங்களை யெல்லாங் கூடையில்வாரிவந்து கொட்டுகின்றனர். அன்றியும், தம்மை (இலக்கியவிலக்கண மெனுங் கடற்கரையைக் · கலக்கமிலாதுபோய்க் கண்டநன்மிதவை ஆகவும், அருமறையாகம வருங்கடன்மாற்றி - இரு நிலம் வியப்புற விரைந்தெழு பயோதரம் ஆகவும்) எணணியின்புறுகின்றனர். இவ ரெவ்வாறெண்ணி மாழ்கினும் யாம் அவர்சோலிக்குப் போகோம். அவர் எமது ஞானபேதவிளக்கத்தைத தூஷித்தாராகையா லவரது மெய்ஞ்ஞானபானுவின் விகற்பத்தைக் கல்விகேள்விகளில் வல்ல பெரியோர் கண்டு நகைசெய்யுமாறு ஈண்டியா மெடுத்து இனிது விளக்க வந்தா மென்க.

---

## நூல்.

இவரது "மெய்ஞ்ஞானபானு" காப்புச்செய்யு ளொன்றை முதலிற் கொண்டிருக்கின்றது. அச்செய்யுள் இவரது கைச்சரக்கு. அதற்கடியில் "உலகெலாம்" என்னுஞ் செய்யுளும், "வேதநெறிதழைத்தோங்க" என்னுஞ் செய்யுளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு செய்யுள்களும் ஸ்ரீசேக்கிழார் திருவாக்கா யுள்ளவை. இவற்றுள், முதற் செய்யுளில் "உலகெலாம்" என்னும் பகுதி ஸ்ரீநடாரஜபதி முதலெடுத்துக் கொடுத்தது. இவ்வரிய செய்யுள்களைப் பிறபடுத்தித் தமது

வறிய செய்யுளை முற்பதித்தது ஸ்ரீநடராஜபதியும், சேக்கிழாரும் அவருள்ளேபுகுந்துணர்த்திய ஞானம்போலும். அவரெடுத்துக் கொண்ட செய்யுள்கள் மேற்கோள்களா யிருப்பின், யாமாட்சேபிக்க இடமிராது - காப்புச்செய்யுள்களாகவே அவர்கருதி யமைத்தாராகையா லவரதமைப்பினளவை யாமளந் தறிவித்தாமென்க. அவரது செய்கை "வாலேமுகமாய் வரவானை யேறினார் - போலேயுன் போதமோ போய்த்தீண்டும்" என்னுந் திருவாக்குக் கிலக்காகி யிழிவேற்று நின்ற தெனலே யமைவுடைத்து. இதனை விரிக்கின், "தான்கருதிய வூருக்குச் செல்லத் தலைப்புறத்தைப் பின்னிட்டு வாற்புறமுகமா யானை யேறினானைப் போலும் நீகருதிய சிவத்தை யடைதற் கருணைப் பின்னிட்டுன்போதத்தை முன்னிட்டுச் சென்று உன்போதமோ வச்சிவத்தைப் போய்த் தீண்டுவது" என்று பெரியார் பணித்த பொருளமைதியே யுண்டாமென்க. அதனை லருள்வடிவமாகிய பாடலகளைப் பின்னும், மருள்வடிவ மாகிய பாடலை முன்னுமவரமைத்த வமைதியை நோக்கி யாவரே யெள்ளி நகையாடா தொழிவர்? அவரதுபாட லருளை மேற்கொண்ட தென்று அவர்கருதினாராயினு மவரதுதவமே யன்றோ "சிவனடியே யென்னு மருட் சேக்கிழார் செய்யுட், கவனருளா லாமுறைநெஞ் சேயா, முவமையில் பொன் - னத்தி விநயகரன் பாலருளு மானை முகச், சித்திவிநாயகர் தாள் சேர்" என்னும் அதில் "யென்னு மருட்" என்று சீர் செய்ய நின்ற பகுதியில் மருள் தலையெடுத்து நின்றது? இவர் சேக்கிழார செய்யுளை மருட்செய்யுளாகக் கொணடா ராகையா லதனைத் தமது செய்யுளுக்குப் பிற்படச் செய்தார் போலும். இன்னு மிவரது செய்யுளைச் சீர் செய்யுங்கால் அதில், "லாமுறைநெஞ் - சேயா- விநாயகரன் - பாலருளு" என்றமைந்தமையால், வகையுளி யென்னுந் தோஷம் வந்தேறிய தறிக. "சித்திதரும் புத்திதருஞ் செந்திருவைச் சேர்விக்கும்- பத்திதரு மெய்ஞ்ஞானம் பாலிக்கும் - கொத்தி அரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த- கரிமுகனைக் கைதொழுதக்கால்" என்னுஞ் செய்யுள்போன்ற வகையுளிவாராத செய்யுளமைக்க வகையறியாத விவரது வைபவ மிவ்வளவினதோ? அந்தச் செய்யுளில், "அத்தி விநயகர்" என்று அமையச்செய்

தார். அத்தி - வில் - நாயகர் என்று அது பிரியும். அதற்கு அத்தியை வில்லாகக்கொண்ட நாயகர் என்று பொருளுண்டாம. அத்தி என்பதற்கு எலும்பு - அத்திமரம் - கடல் - கொலை - பாதிசெய்யென்னேவல - யானை இவை பொருளாகும். இவற்றுள், அத்தியை வில்லாகக்கொண்ட நாயகர் என்றபோது எதனையமைத்துப் பொருள் கூறுவது? சிவனுருக்கு வில்லா யுள்ளது பொன்மலை. ஈண்டு நமதன்பர் "பொனனத்தி" என்றுங்கூறினா ராகையால அவரத்தியென்னுஞ் சொல்லுக்குக் கொண்டபொருள் மலை யென்றே யேற்படுகின்றது. யாண்டும பெறப்படாத மலை யெனனுமபொருள் அதற்குளதெனவிவர்தேடிய தின்றிவரமைத்த புதிய விலக்கியத்தி லேறியுள்ள மருளின்கண்வீசு மணமேயாமென்றறிக. இனி யிவர் வகையுளியமைந்த பழைய பாடல்களைத்தேடி யெமக்குப் புதுமைகாட்ட வரலாம. அது கனம் பெறமாட்டாது. ஏனெனின், இவர் பிறரெல்லாம மின்மினியுமொவ்வாதவரென விழிவுகூறினா ராகையா லிவரொத்தனை யற்பகுற்றத்தானு மிழிந்திடாப்படுத லேலாமைபற்றியென்க. வகையுளி யென்னுங் குற்றமுண்டாத லடாதென விலக்கணநூலா ரெடுத்திசைத்தமையின், அஃதிவர்க்குப பேரிடும்பை விளைக்காதென லசங்கதமேயாம். அன்றியுமிவர் தாமமைத்தவத்திக்கு மிடர்ப்பட்டோ ரத்தந்தேடி யாமெழுப்பிய வாசங்கையை யறுக்க முந்தலாம். அஃதுமிவரா லொன்றினை யொட்ட முயல்வா ரினமபற்றி யொதுங்குமென்க. விரிக்கிற்பெருகும்.

இனி யிவர் தமது மருட்டலைக்கொண்ட நூலுக்கு "மெய்ஞ்ஞானபானு" என்று பெயரிட்டனர். இவரது பானு சித்திரபானு போல்வதொன்று. சித்திரபானு விளக்கமில்லாதது. இது போல விளக்கம் பெறாத பானுவாகிய வதனை யிருள்பொதிந்த வஞ்ஞானபானு வென்பதே யமையும். இவரது பானு விளக்கமில்லாத தென்பதனை யாம் பின்னர் விளக்குவதனாற் கண்டறிக. இவர் தமது மெய்ஞ்ஞானபானுவின் விசேடத்தைப் பிரசங்கிக்கத் தொடங்கி "இங்ஙன மெய்ப்பொருள் கூறுதலா

றும், இதுவோ அதுவோ பொருளென்று மயக்கவிருளை யொழித்த லானும், இரண்டு சிறந்த புலவராக ளெழுதப்பட்ட ஞானபேதவிள க்கம், ஞானசூடாமணியென்று முரைகளாகிய விளக்கின்ஒளி பு கணிபின்ஒளியுந் தன்பேரொளியி னடங்குமாறு கோடலாறு பிர வுரை மெய்ஞ்ஞானபானு வெனனும் பெயர்த்தாயிற்று'' என்று முடித்திருக்கின்றார். இவர் பிரஸ்தாபித்த விரண்டு நூலக ளுள், ஞானபேதவிளக்கம யாம செய்தது. ஞானசூடாமணி கோபபாய் - சபாபதிபபிள்ளையவர்கள் செய்தது. இவற்று ள், ஞானசூடாமணி நிற்க. ஞானபேதவிளககம் என்பதில விளக்கம் எனபது விளக்கு என்னும பொருள் பயவாது. விளக்கு என்பது தீபம. விளக்கம் என்பது ஒளி அல்லது பிரகாசமாம. இவவிளக்கமானது விளக்கினைமாத்திரமே யன்றிச் சூரியன், சந்திரன, அக்கினி என்னுஞ் சுடர்களையுந் தொடர்ந்து சூரியனது விளக்கம, சந்திரனது விளக்கம, அக் கினியினது விளக்கம என்று பிரசங்கித்தற் காதாரமாம, இவ் வாறு தெளியு மறிவினது விளககம்பெருமையா லிவர் விளக் கத்தை விளக்கெனக் கருதி யதற்கோ ரொளியுளதெனக் குழம்பிக் கூறவந்தார். விளககத்திற்குமே லொருவிளக்குமுண் டென நினைந்து விளக்கத்தின்ஒளியென்றிட லடாதாகையா லெமது ஞானபேதவிளக்க மிவர தொளிபெறுந பானுவிலட ங்காது அதனைத் தனனிலடக்கி வியாபித்துநின்றமை யெளி தினுணரலாமென்க. இதுநிற்க.

இவர் "இங்ஙன மெய்ப்பொருள் கூறுதலானும்'' என்று பிரச ங்கித்த மெய்ப்பொருள் யாது? தாங்கருதிய மெய்ப்பொருளை முன்னர்ப் பிரகாசப்படுத்தி யிருப்பினன்றோ அவ்வாறு தொ டங்குதலமையும்? இனிக் கூறப்போவதாகிய வதனை (பொ ருண்மயக்க முண்டாமாறு) முதலிலேயே சொல்லிவிட்டது போல "இங்ஙன மெய்ப்பொருள் கூறுதலானும்'' என்றது எழுத வறியாத விளங்கல்வியின் பயனென்றே யெவரு மெளிதினு ணர்வரென்க. அன்றியும், "இதுவோ அதுவோ பொருளென் று மயக்கவிருளை யொழித்தலானும்'' என்றிவர் கூறியது மவல மேயாமென்க. எங்ஙனமெனின், இதுவோ அதுவோ என்

பது குற்றியோ மகனோ என்பது போல்வது. குற்றியெனல் மெய், மகனெனல் பொய் என்று தெரிவித்தல்போல இது மெய், அது பொய் என்று தெரிவித்தல் வேண்டும். குற்றியையும், மகனையும் விடுத்து இவ்விரண்டுமெல்லாத வேறொன்றினைக் கூறுதல் கேவலமசங்கதமாயிடுதல்போல இதுவோ என்னும் விளக்கஞானத்தையும், அதுவோ என்னு மணிஞானத்தையுந் தள்ளி எதுவோ வொன்றாகிய இருண்ஞானத்தை யிவரெடுத்திசைத்தது எவருங் கேட்காத இழிஞானமென்பதேயாம். இவரிவ்வளவிலமையாது "இரண்டு சிறந்த புலவர்களெழுதப்பட்ட ஞானபோதவிளக்கம் - ஞானசூடாமணி" என்று பிரசங்கித்ததில "இரண்டு சிறந்த புலவர்கள்" என்றது ஞானபோதவிளக்கம்-ஞானசூடாமணி யெழுதினவர்களைப் பரிகசித்தபடியாம். இவர் "இரண்டு சிறந்த புலவர்களெழுதிய ஞானபோதவிளக்கம்-ஞானசூடாமணி" எனவாவது, அல்லது "இரண்டு சிறந்த புலவர்களா லெழுதப்பட்ட ஞானபோதவிளக்கம்-ஞானசூடாமணி" எனவாவது எழுதத்தெரியாதவராகையால், இப்பெரும்புலவர் சந்நிதியில அன்னோர் சிறந்த புலவர்களாகாதது விவேகிகள் துக்கிக்கத்தக்கதன்று. இங்ஙனநிற்க.

இவர் "இஃதொருவர் மதத்தை மறுத்தற்காவது, ஒருவர் மதத்தை நாட்டுதற்காவது கொண்ட நோக்கத்தோடு செய்யப்படாமல உண்மைப்பொருளை விளக்கு நோக்கத்தோடு மாத்திரஞ் செய்யப்பட்டது" என்று பிரசங்கித்திருக்கிறார். இஃதுண்மையாயின், "மின்மினியு மொவ்வாத சிலர்தாமும் புலவரெனக் காணப்பட்டு-முறைப்பட்ட கேள்வியிலராயும்-நிரம்பிமுதிர்ந்த வறிவிலராயும்-முறைமையினையும் நோக்காராயும்- அகலமாக வுரை செய்யக்கருதி-கோவைப்பட எழுதப்படாததாயுஞ் சாமானியமாய பலராலுஞ்சொல்லப்படுவதாயும்-ஆழ்ந்து நுண்ணியபொருளை விளக்கமாட்டாததாயுமுள்ள தமதுரைக்கு-வேதம்- பொதுநூல்-ஆகமம்-சிறப்புநூல்-பதியியல்பு-பசுவியல்பு-பாசவியல்பு- அநாதிமுத்தசித்துரு- சச்சிதாநந்தப்பிழம்பு என்பன முதலியனவான எண்ணிறந்த சொற்றொடர்களையு மிடைக்கிடைசேர்த்து, சாமானிய சனங்கள் கண்டாச்சரியப்படும்படி உரை கூறுவதும் பிரசங்குசெய்வதும் பத்திரிகை யெழுதுவதுமாகிய இவ்விபரீதகாலத்து" என்றது முதலாக முழுநீளப்பி

ரசங்க மிவர் செய்திருப்பதற்கு யாதுதான் பொருளோ வறியேம். இவ்வாறு நிந்தையிலிறங்கிய இவ்விந்தையாளர் "காலவியற்கைக்கேற்பப் பலரும பல பேதப்பட வுரைகூறி யொருவரையொருவர் மறுத்து நிந்தித்துவருகின்றனர்" எனவுங் கூசாது பேசி யிருக்கின்றனர். அன்றியும, "அச்செய்யுளின் மெய்ப்பொருளிதுவெனவும், ஈதேயோருரையி னியல்பிதுவெனவும் தெளிவித்தற்கெம்மா லிவ்வுரை செய்யப்பட்டது" என்று முடிவுகூறினர். இவரது பிரசங்க முழுதும் பிறரை நிந்திப்பதும, தற்புகழ்ச்சி செய்வதும, பிறமதத்தனை மறுப்பதும, தன் மதத்தை நிறுத்துவதுமாகவே யிருப்பதற்கு மாறாக ஒருவர்மதத்தை மறுத்தற்காவது, ஒருவர மதத்தை நிறுத்தற்காவது கொண்டநோக்க மெமக்கின்றென விவர் பேசிய பொய்யை வைவஸ்வதனே விசாரிக்கத்தக்கவன் இவர் பிறரிடமுள்ளனவாகக் கண்டு கூறியகுற்றங்கள் காலவியற்கையினமைவன் றெப்பிய பின்னரக்காலவியற்கையா லக்குற்றங்க டடைபாங்கல்வருதேறுவெனத் துணிந்தது என்னாந்? "இவ்விபரீதகாலத்து" எனக் காலதூஷணஞ் செய்துவிட்டு அவ்விபரீதகாலமாகிய விக்காலத்தில "உண்மைப்பொருளை விளக்கு நோக்கத்தொடு மாத்திரஞ் செய்யப்பட்டது" என்று தமமுடையகாலைத் தாமே கும்பிட்டுக்கொண்டவாறென்னை? விபரீதகாலத்துக்கு விலட்சணகவியா யிவர் வெளிப்பட்டார்போலும். இவர் காலத்தை விபரீதமென்றது அசங்கதம். விபரீத மிவரது சொந்தவடிவென்பதே நிச்சயமென்க. இதுநிற்க.

இவர் "மின்மினியுமொவ்வாத சிலர்" என்று பிறரைத்தூஷித்தது எதனால்? இவரை யாரேனுங் கல்லாதவரெனக் கசந்துரையாடியிருப்பின், ஒருகா லவர்சோலிக்கிவர்போக இடமுண்டு. இதுகாறு மொருவரு மிவர்பேரை யெடுத்ததில்லை. இங்ஙனமாக, இவர்செய்யவந்தகாரியம் அளவுக்கு மிஞ்சினதேயாம். இவர்க்குப் பிறரெல்லாமின்மினியு மொவ்வாதாராயின், இவர் தம்மை எதுபோல்வாராகவோ எண்ணியிருப்பது? தாமெவ்வாறு எண்ணியிருப்பினு மிருந்திடுக. யாம் அவரதறிவினொளியைக் கூகையின்கண்ணொளிபோல்வ

தாகவே கொண்டொதுக்கினுமென்க. இப்போது யாம் பரிசீலி த்துவரு மிவரதஞ்ஞானபானுவின் கதியை நோக்குபவாக ளிவரது புலமையை யெளிதினுணர்வார்களாகையா லிவர் தருக்கியது அவலமேயாம். ஒருகா லிவரிப்போது மதுரைக் கல்விச்சங்கத்துக்குத் தலைவராயிடுதனோக்கித் தம்மை நக் கீரர்போல்வாரா யெண்ணி யிறுமாந்திருக்கலாம. நக்கீரா சோமசுந்தரத்தாலழிந்தமை யுணர்ந்தவாகள் இவர் நகை நாணுதவரென்று பழிப்பரென்க. இவரின்னும் பலவா று தூஷித்ததூஷணங்கணிற்க. "கோவைபபட எழுதப்படா ததாயும் - ஆழ்ந்து நுண்ணியபொருளை விளக்கமாட்டாததாயு மு ள்ள தமதுரை" என்று பிறருரையை நிந்தித்த விந்தையைச் சற்று நோக்குவாம். இவரதஞ்ஞானபானுவினது 2-வது பக்கத்தில் 12-வது வரியிலுள்ள "அயாகள்" என்னு மெழு வாய் 15-வது வரியிலுள்ள "எடுத்தக்கூறும்" என்னும பய னிலைகொண்டுமுடியவு மிதற்கிடையில "அவா" என்னு மற் றோரெழுவாய் "எடுத்துக்கூறு" மென்பதன்முன்னர் நின் று பயன்செய்யாமையும, அந்தவாக்கியத்தைப பிழைபடுத் தினமையும், அதி லடங்கியபொருளைச் சிதைவித்தமையும், இத்தகையவழுக்கள் பலவற்றிற்கிடஞ்செய்தமையு மாகிய வாபாசத்துக் கினியுண்டாகுங் கதியென்னே? இவர் கோவை ப்படவெழுதிய வருமையை யீணடுத்தெரிவித்தோம். இனி யிவராழ்ந்து நுண்ணிய பொருளை விளக்குமருமையிலு மொ ன்றெடுத்துக் காட்டுகிறோம். இவரது சுவடியினது 4-வது பக்கத்தில், "அது யாகமுதலிய கன்மப்பயன்போல அநுபவமாத்தி ரத்தாலழியாத முத்திப்பயனைத் தந்தேவிமோகவின்" என்று கூறி யிருப்பதில், யாகமுதலிய கன்மப்பயன் அனுபவமாத்திரத் தா லழிவதெனவும், முத்திப்பயன் அனுபவமாத்திரத்தாலழி யாத தெனவு மிவர்கொண்ட கருத்தாகின்றது. இஃதொ ருகருத்தினையே யிவரதுவாக்கியங் கோடலின்றி (யாகமு தலியகன்மப்பய னெவ்வாறு அனுபவமாத்திரத்தா லழியாது நிலைப்பதோ, அதுபோல முத்திப்பயனு மனுபவமாத்திரத் தா லழியாதுநிலைப்பது என்னுங் கருத்தினையுங்) கோடலு க்கிவர் செய்வது யாதோ? இவரது கருத்தையழிக்கு மற்றோ

ாகருத்து இவரது பிழைபந்தவாசகத்திற் புகுந்திவருக கிடக் கண்விலாத்தமைக் கிவரினியென்செய்வார்? இவரதனைத் தெளிவுபெற வெழுதுவதாயின், "அது யாகமுதலிய கன்மப்பயன் போலாது அநுபவமாத்திரத்தா லழியாத முத்திப்பயனைத் தந்தே விடுமாகலின்" என்றிருத்தலே யமைவுடைத்து இவ்வளவு கணடெழுதவகையறியாத இவருக்கேன்ரு வீணவாய்? பிழைகள் பலபொதிந்துகிடக்கு மிவரது பீற்றலினவதியைச் சிறிதும் நோக்காது பிறரது நூல்களைக் கந்தையென் றிவர் கழறியிருக்கு மிவரது கந்தைஞானத்தையு மீணடுச் சிறிது காட்டி யொழிபபாம.

இவா "வறியன றனக்குரியவோர் சிறுகந்தையில அதன் வடிவந் தெரியாவண்ணஞ் செல்வர் பலரிடதநுஞ் சென்றிரந்து பெற்ற பலவண்ண முள்ள வுயர்ந்த வாடைகளின கிழிகளைப் பொதிந்து அதுவு மிகவுமகனறு நீளுமாறு தைத்துப் பொத்திய போர்வை யாகிய பொநதைபோல" என்றோருவமை கூறி,பிறரையும் அவரது நூலையும பழித்துத் தருக்கினுர். இவ்வுபமான மிவரெடுத்துக் கொணட வுபமேயத்துக் கிணங்காது. அதனைப் பின்னர் விரிப்பாம. ஈண்டிவா "சிறுகந்தையில்கிழிகளைப்பொதிந்து" என்றுகூறினுா. "பொதிந்து" என்பதற்கு "மூடி" யென்று பொருளுணடாம். கநதையிற் கிழிகளைமூடுவது என்னுங்கால் கிழிகளுள்ளிருப்பனவும், கந்தை அக்கிழிக டெரிய வொட்டாது மேலேமூடுவது மாகின்றன. அப்போது மேலேமூடியகந்தை தெரிவதன்றி அதனுற்பொதியப்பெற்ற கிழிகடெரிய விடமிலலே. இவரோ "சிறுகந்தையில் அதன் வடிவந் தெரியாவண்ணம்" என்று எசியிருக்கின்றனர். இவர் தேடிய "பொதிந்து" என்னுஞ்சொலலானது இவரெடுத்துக்கொடுத்தகிழிகளாற் சிறுகந்தையை மூடமாட்டாதாகையால், அதனை யிவரினித் திலதர்ப்பணம பண்ணிவிடவேண்டியதே. அச்சிறுகந்தை தெரியாமலிருக்கச் செய்யவேண்டுமாயின் "பொதிந்து" என்னுஞ் சொல்லை நீக்கி "சேர்த்து" என்னுஞ் சொல்லைக் கூட்டிமுடிக்க வேண்டியது. அல்லது, "சிறுகந்தையில்" என்பதைச் "சிறுகந்தையை" என்று மாற்றி மணப்

பிக்க வேண்டியது.இரண்டிலொன்று செய்யாதபோது இவா து மனோரத மீடேறமாட்டாது.இந்த நுட்ப முணர்ந்தவர்கள் (இரண்டுவரி செம்மையா யெழுதவறியாத விவரையே) கந்தையாடையினரென்று கருதுவரென்க. இவா (தரித்திரன னதனைப் பழித்ததுபோல்) பிறரை யேசியதா லிவரது எனை யாபாசத்தையு மீண்டிசைக்கத் துணிந்தாமென்க.

இவரது கந்தையுபமான மிவரெடுத்துக்கொண்ட வுப மேயத்தைச் சாதிக்கும் வன்மையற்றதென மேலே யாம் கூறினம். அதனை யீண்டு விரித்திடுவோம். தரித்திரன் றனது சிறு கந்தையில் செல்வர் பலரிடஞ் சென்றிரந்த வுயர்ந்த வாடைகளின் கிழிகளைச் சேர்த்துத் தைத்துப் பொத்தி அதனுருவந் தோன்றுதவண்ணம் பெருக்கிக்கொண்டவாறுபோல ஞானபேதவிளக்க நூலாரும், பிறருமாகிய தரித்திரா தமது நூல்களாகிய சிறு கந்தைகளில் தொலகாப்பியம்- சிவஞான போதம்-கந்தப்புராணம்-சேதுப்புராணங்களென்னு முயர்ந்த வாடைகள் புனைந்த செல்வராகிய அந்நூலாசிரியாகளிடஞ் சென்றிரந்து பெற்றுக்கொண்ட வந்நூலகளின் சூத்திரங்களும், செய்யுள்களும், உரைகளும், வாக்கியங்களுமாகிய கிழிகளைச் சேர்த்துத் தைத்துப் பொத்தி அவற்றி னுருவந்தோன்றுதவாறு பெருக்கிக்கொண்டார்களென் றிவர்பேசி மகிழ்ந்தது இவரதுகந்தையாடையின கோலத்தையே யாவருக்குங் காட்சிப்படுத்திவிட்டது. எங்ஙனமெனின், செல்வராயுள்ள பேர் தமக்குரிய ஆடைகளைத் தாமே யுண்டுபண்ணுவதில்லை. பிறரிடம் விலைகொடுத்துவாங்கித் தரிப்பார்கள். இவ்வுப மானம் தொல்காப்பியம்- சிவஞானபோத முதலிய நூல்களைத் தாமே யுண்டுபண்ணிய நூலாசிரியர்களிடம் பொருந்துமாறெங்ஙனம்? தரித்திரர்கள் யாசித்துக் கந்தை பெறுவதுபோல், செல்வர்கள் பொருள்கொடுத்துப் பிறரிட மாடைகள் பெறு நிதரிசனத்தால், தரித்திரரைப்போலவே செல்வரும் பிறரை யெதிர்நோக்குவாரே யாயினர். இதனுல் ஞானபேதவிளக்க நூலார்போன்று தொலகாப்பியர் முதலாயினரும் பிறரிடந் தொல்காப்பிய முதலியவைகளைப்பெற்று வெளிவந்தா

ராகவே கோடலமையும். தொல்காப்பியமுதலியன வவ்வி யல்பினவாகா.ஆகையால், ஆடையுபமான மதோகதியாயின தறிக. அன்றியு மாடையின்கிழிகளைச் செல்வர் வறியவர்க்கு வழங்குங்கா லவ்வாடை முதலற்றுப்போகின்றது. அந்தோ வீவர் பிறர்க்காடையுபகாரஞ்செய்யுஞ் செல்வர்களை நிர்வாணிகளாக்கத் தொடங்கினரிதென்கொலோ? பழையவாடைகளையே யாசிபபோர்க் கவாதருதலா லவர்க்குப் புதியவாடை புனைதல் கூடுமெனி னதுவுமஸங்கதமேயாம். தொல்காப்பிய முதலியன பழையவாடைகளும், அவற்றுட்போந்த சூத்திர முதலியன கிழிகளுமாருங்கா லிவா வகையறியாது பூஷிக்க வந்த தொல்காப்பியமுதலியன முதலற்றுக் கந்தைகளாய்க் கழிந்திடும். பழையதொல்காபபிய முதலியன கழிந்தபோது ஆடையின்றி நிர்வாணிகளாய்நின்ற வவ்வாக்கியோர்க்கு நமதலபர் புதியதொலகாப்பியமுதலியன புனைந்துகொடுத்து அவர்களது மானங காத்திடலவேணடும். ஐயோபாவ மிவருக்கதிக கஷ்டமவந்ததற்காக யாம அதிகவருத்தப்படுகின்றோம. இனித் தொல்காபபியமுதலிய நூல்களிலுள்ள சூத்திரங்கள் - பாடல்கள் - உரைகள் - வாக்கியங்கள் முதலியவைகளை யெத்தனைவித்வான்களெடுத்துத் தனித்தனித் தமதுநூல்களி லாளடுகொண்டாலு மவை முதனூல்களின் சொரூபங்கெடக் கந்தைபோலுங் கழிந்திடுமியல்பினவாகா. அன்றியுங் கிழிகளைச் செலவரிடம் யாசித்துப்பெறுவது போல மேற்கோள்களை யாக்கியோரைத்தேடிச் சென்றிரந்து பெறுதல் வழக்கன்று. இவ்வாறுவிசாரிக்கும் விவேகிகளது சபையி லிவரதுகசதையறிவு சிந்தகோர்ந்தது பரிதாபமென்க. இம்மட்டோ, இவர் கந்தையோடொழியாமல் "பொந்தை"யும் "பொத்தி"யுந் தேடிப் புலவராயினர். இவற்றைவிரித்தல் வீண்காலக்ஷேபமாய்முடிதலி னிவ்வளவில் விடுத்தாமென்க. இனி யிவர் மேலோரது சம்பிரதாயங்களை யறியாதவராகையா லிஷ்டவிகாதம்பண்ணிக்கொள்ளாம லிசைந்தவாறெல்லா மெழுதத்துணிந்தாரென்பதே முடிவென்றறிக.

இனியொன்று சொல்லுகிறோம். "கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புலனு- மொண்டொடிகண்ணேயுள" என்று திருக் குறள் கூறுகின்றது. "கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியுமைம்புல னு - மொண்டொடிகண்ணேயுளவென்று - பண்டையோர் - கட்டு ரையைமேம்படுத்தாள்" என்று ஆதியுலாக்கூறுகின்றது. இவை களை நமதன்பர் பார்த்திடி னிரண்டிலொன்று ஆடையுமா, மற் றொன்று கிழியுமாகக்கொண்டு குழப்புவார்போலும். அன்றி யும், "வேதைச்சஸர்வைரஹமேவவேத்யோ - வேதாந்தக்ருத்வே தவிதேவசாஹம்" என்று கைவல்யசுருதி கூறுகின்றது."வேதை ரநேகைரஹமேவவேத்யோ - வேதாந்தக்ருத்வேதவிதேவசாஹம்" என்று பாரதங்கூறுகின்றது. இவற்றுள், ஒருவசனத்தில் "ஸர் வைஃ" எனவும், மற்றொருவசனத்தில் "அநேகைஃ" எனவும் பரியாயபதங்கள் போடப்பட்டிருக்கின்றன. இவ்வளவேயன் றி யிவற்றுள் வேறுபேதங்கிடையாது. இப்படியே மூலபுரா ணமொவ்வொன்றினுஞ் சுருதிவசனங்கள் நிறைந்துகிடக்கின் றன. இவ்வாறுமன்றி, மேற்கோளாகச் சிற்சிலவசனங்களை யாங்காங்காவசியக நேர்ந்தபோது பெரியோர்களது நூல்களி லிருந்து கற்றவர்களெடுத்தாள்வது நமதன்பருக்கு விபரீதஞ் செய்ததன்றோ? இது கற்றவர்களுக்குப் பேராச்சரியமாமென் க. இப்போது வெளியாயிருக்குஞ் சித்தியாருரைகளிற் சிவா க்ரயோகிகளுரையை யிவர்பார்ப்பாராயின், உரையொருபங் குமா, உதாரண மொன்பதுபங்குமாய் நிறைந்து கிடக்கின்ற னவே. அதற்கினி யிவர்செய்வது யாதோ? இதுநிற்க.

இவர் (ஒருகுழந்தையினிடத்துப் பலநிறவன்னங்கிடை த்தவழி அதுவு மோரோவியனைப்போல யானை குதிரைமுத லிய அந்தக்கேடானசித்திரங்களை யெழுதிப் பளபளக்கச்செய் தபோது சித்திரத்தியல்புணராதோர் அவற்றைக்கண்டாச்சரி யமடையுமாறு சாமானியசனங்கள் கண்டாச்சரியமடையும் படி உரைகூறுவதும், பிரசங்கஞ்செய்வதும், பத்திரிகையெ ழுதுவதுமாகிய விபரீதங்கள்செய்கின்றனர் பிறர்) என்று தூ ஷித்திருக்கின்றார். இவர்போன்று பொருமைபேசியபேரை யாமிதுகாறுங் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இவர்

தேடியஉபமான மிவரிடத்திலேயே யெர்ப்படைக்கத்தக்கது.
எங்ஙனமெனின்,இவருரைகூறியதில்"வாலேமுகமாய்"என்னுந்
திருவெண்பாவுக் கிவ ரிலக்காயினுரென்பதை மேலே யெடுத்
துக்காட்டினும். அதனு லிவர் யானையினது பின்புறத்தில் து
திக்கையையும், முன்புறத்தில வாலையும் வகைபறியாதெழு
திய வோவியப்பண்டித சிகாவோடொப்பாயினுரென லமைக்
தது. இவாறு அழகிய வன்னவேலையின்றிற மின்னுந்தெரிய
வேணடின், "அவர்கள்-அவர்" என்று இரண்டெழுவாயை
"எடுத்துக்கூறும்"என்னுமப பயனிலைக்கு (குற்றமுண்டாமாறு)
இவாகூறினமையால அவைவனனத்தை மேலுக்குமே லப்பி
வைத்த அந்தக்கேட்டுக் குவமையாகிறது. அன்றியு மவை
யானையின முன்புறத்தி லொருதலையும், அதனிடைப்புறத்தி
லொருதலையு மெழுதிவைத்த அந்தக்கேட்டுக்கும் ஸாத்ருச
மாகிறது. இம்மட்டோ, இவர் "இரண்டுசிறந்தபுலவர்களை
ழூதப்பட்ட ஞானபேதவிளக்கம்-ஞானசூடாமணி" என்றெழுதினு
ராகையால், அது யானையை அங்கபங்கமாகக்கீறிய விபரீத
த்தோடொத்ததாயிற்று. அன்றியும், இவர் "அது யாகமுதலிய
கனமப்பயன்போல அநுபவமாத்திரத்தா லழியாத முத்திப்பயனைத்
தந்தேவிடுமாகலின்" என்றெழுதியுள்ளா ராகையால், அது
குதிரையெழுதக்கருதியசேய் குதிரைபோல்வதாகிய கோ
வேறுகழுதை யெழுதியதற்கே யொப்பாயிற்றென்க. இன்
னுமிவ்வாறு பொதிந்துகிடக்கும் பிழைகள் பலவுளவாகையா
லந்தக்கேடான சித்திரத்திற் கைதேர்ந்த மகாபண்டிதசிகா
வாயினர் நமதன்பரென்றற் கோரையமுமின்றாம். இன்னு
மிவா "இலக்கணமுதலியகருவிநூல்களை நன்குணர்ந்து இலக்கிய
வாராய்ச்சி நிரம்பிமுதிர்ந்த" எனவொன்று கூறியிருக்கின்றார்.
இது எங்குள்ள சம்பிரதாயம்? நிகண்டுகெற்று இலக்கியவாரா
ய்ச்சிசெய்து பின்னரிலக்கணமுணர்ந்து என்றெழுதவறியாத
விவரு மொருபண்டிதராக வெளிவந்தது பரிதாபமென்க.
இன்னும் விரிக்கிற் பெருகும். இதுகாறும் யாமெடுத்தெழு
தியகுற்றங்க ளிவரது சிறுநூலி னற்பபாகத்திலுள்ளன. அதி
கபாகத்தையும் பரிசோதித்தான் மணற்சோற்றிற் கல்லாரா

ய்வதுபோலாமென்றற் கிழுக்கென்னோ? இவரது திறமை யிவ்வாறாக, "சாமானியசனங்கள்கண் டாச்சரியமடையும்படி உரைகூறுவதும், பிரசங்கஞ்செய்வதும், பத்திரிகையெழுதுவதும்" என்று பிறாதுசெயலகளை இவர் ஹேயமாகக்கூறியதென்னோ? ஈண்டிவரைக்குறித்து யாமெழுதியதுணர்ந்தவர்க ளிவரைச் சாமானியசனத்தினும் வைத்தெண்ணுறொன்க. இனியிவருக்கு உரையெழுதவும், பிரசங்கஞ்செய்யவும், பத்திரிகையெழுதவுந் தெரியாதகுறைவை அவ்வாறுசெய்யும் விவேகிகளைத் தூஷித்துப் பூர்த்திசெய்துகொண்டாரென்பதே முடிவென்றறிக. இதனை யிம்மட்டினிறுத்தி யினியிவரது ஞானவிசாரத்தினியல்லைச் சிறிது பரியாலோசிப்பாம.

(ஞானவிவரணம்.)

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞான
முவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்."

என்னு மிந்தச்செய்யுளே நமதன்பரது ஞானவிசாரத்துக்கிடமாய் நின்றது. இதில், ஞானம - ஞானம் - ஞானம - ஞானம் என்று நான்குமுறைபிரஸ்தாபித்து, அவைகளைச் சம்பந்தருணர்ந்தாரென்று ஸ்ரீசேக்கிழார்சுவாமிகள் பிரகாசப்படுத்தினர். இந்நான்குஞானங்களையுஞ் சம்பந்தருணர்ந்தா ரென்பதனை யுரைகூறியுரப்பவந்த பூர்வபட்சியார் அச்சம்பந்தரைபபிரஸ்தாபித்து "பிள்ளையார்சாமுசித்தராய் முற்றவமுடையவராதலின் அவர்முற்பிறப்பிலேயே கலைஞானத்துள் கன்மகாண்டஉபாசனாகாண்டங்களை முற்றுமுணர்ந்து ஞானகாண்டத்திற் கேட்டலுஞ்சிந்தித்தலுநிரம்பித் தெளிதலினின்று சிறிதுகுறைபாட்டா லனுபூதிஞானம் நிரம்பாமல் அதுநிரம்புதற்பொருட்டுப் பிறப்புற்றனர்" என்று பிரசங்கித்து மாழ்கினர். பிள்ளையாருக்கு முற்பிறப்புண்டெனவும், அப்பிறப்பிலவர் ஞானகாண்டத்திற் றெளிதலினின்று சிறிதுகுறைபாட்டா லனுபூதிஞானநிரம்பாமல் மீண்டும் பிறந்தனரெனவு மிவர்பிரசங்கித்ததற்காதாரவாய்நின்ற பிரமாணம்

யாது? இவர் பிள்ளையாரிடங்கண்ட சிறிதுகுறைபாடென்ப தெவ்வளவினது? இவர் கேட்டல் - சிந்தித்தல் - தெளிதலிற் சிறிதுகுறைபாடு என்று கூறினமையா லத்தெளிதலின்சிறிது குறையை முந்நிராயமிசமாகவே யாமகொண்டாம். அதனால், சம்பந்தா முற்பிறபபிலே (இரண்டேமுக்காலேமூனுவீசமுக்காணியரைக்காணி முந்நிரைஞானம்) பெற்றனரென்ப திவர்கருத்தாகலாம. அச்சிறிதுகுறைபாட்டினை யின்னுங்குறைத்தாலிம்மி கீழிம்மியினுஞ் சென்றொடுங்கும். சம்பந்தரதுமுற்பிறப்பி லிவருங் கூடவிருந்து அவரது ஞானத்தை யறிந்தளவிட்டு அதனை யெமக் குணர்த்தவே யிப்போ துலகி லவதரித்த புமானுயினாபோன் றிவர்வாய்திறந்த திவர்முற்பிறப்பிலீட்டிய ஆபாசஞானத்தின் மணமேயாமென் றறிக.

இனி யெமதுபிள்ளையாரது பேரருட்டிற மீதெனவிரிப்பாம். அவரதுபுராணத்தின் முதற்செய்யுள்

> "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
> பூதபரம பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
> சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
> பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்."

என்பது. இதில், மூவாண்டிற் பிள்ளையாரழுதது வேதநெறி தழைக்கவும், சைவத்துறைவிளங்கவும், வேதநெறி - சைவத்துறைகளாகிய வைதிகசைவங்களைப்பற்றிவாழும் அடியார்கள் பொலியவுமேயென்று சேக்கிழார்சுவாமிக ளினிதுபிரகாசப்படுத்தினர். அவ்வளவேயன்றி, முற்பிறப்பில் விட்ட குறைவை நிறைவுசெய்துகொள்ளுமாறு அழுதனரொன்று கூறுகின்றிலர். பிள்ளையாருக்கு முற்பிறப்பு - பிற்பிறப்புகளுளவெனவும், அவர் தவக்குறைவுடையாரெனவுஞ் சேக்கிழாரெங்கேனுங் கூறியிருக்கின்றனரா? பிள்ளையாரது செயல்யாவும பரப்பிரயோசனங்குறித்த அருள்வயத்தினவென்ப தவரது துணிவாதலை யீண்டறிவித்திடுவோம்.

(பிள்ளையார் உலகமுய்யவந்தவரென்பது.)

1. "ஏழிசையும் பலகலையு மெவ்வுலகுந் தனித்தனியே
வாழவரு மவர்தம்மை"
2. "அருமறையோ டுலகுய்ய
எங்கள்பிரா னீராண்டின் மேலோராண் டெய்துதலும்"
3. "தொண்டினிலை தரவருவார்"
4. "வையமெலா முய்யவரு மறைச்சிறுவர்" [யாலே"
5. "மங்கலமா மெய்ஞ்ஞான மண்களிப்பப் பெற்றபெரு வாழ்த்தை
6. "அம்பிகை யளித்தஞான மகிலமு முய்யவுண்ட
நம்பெருந் தகையார"
7. "ஞாலமுய்ந்திட ஞானமுண்டவ ரெழுந்தருளுமங் கலங்கண்டு"
8. "பார் - உய்ய வந்தவா செழுந்தமிழ்ப் பதிகம்"
9. "இந்த மாநிலத் தினனிரு ளொங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்"
10. "சோதி முத்தின் சிவிகை - அஞ்செழுத்
தோதி யேறினா ருய்ய வுலகெலாம்"
11. "வைய மேழுடன் மறைகளு நிறைதவத் தோரு
முய்ய ஞானசம் பந்தன்வந் தானென வூத"
12. "தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை
யிருளு நீங்கவு மெழுதுசொன மறையளிப் பவர்தாம"
13. "புவிகைம் மாறின்றிப் போற்றவந் தருளினர் போந்தார்"
14. "மண்ணுலகு செய்ததவப் பயனாயுள்ள வள்ளலார்"
15. "நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர்வந்து நண்ணினார்"
16. "எவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்காளத் தெழுந்த
[வோசை"

என்பனவாதி பிரமாணபாஹுள்யங்களைத் தரிசிக்கும் ஸாதுக்கள் நமதன்பர் தூற்றிய ஞானசம்பந்தரது தூஷணங்களைக்கண்டு வயிறெரியாமற்போவார்களா? தமக்கொருகுறைவிருந்து அதுநீங்குமாறு பிறந்துய்ந்தனர் சம்பந்தர் என்று மறந்துங்கூறாத சேக்கிழார்நூலைக்கையிற்பிடித்துக்கொண்டே பூர்வபட்சியார் அச்சம்பந்தர் நிந்தையிலிழிந்தது விளக்கினைக் கையிற்கொண் டொருவன் வழிதப்பிக் குழியிலிழிந்ததனையே மானுமென்க, இதுநிற்க.

(பிள்ளையார்பிறந்திறவாதவரென்பது.)

ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் எமதுபிள்ளையாரைப் பிறந்திறவாத பெரியபெருமானென்று பேசியிருப்பதை இனித்தெரிவிக்கின்றோம்.

"ஒருபிறப்பு மெய்த்தாமை யுடையார் தம்மை
யுலகியல்பி னுபநயன முறைமையாகு
மிருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி"

என்னுந் திருவாக்குப பிள்ளையாருக்குப் பூர்வஜந்ம முண்டென்பாரைப் பிரதிஷேதிக்கின்றது.

அன்றியும்,

"ஈறிலாத் திரு ஞானசம் பந்தரங் கிருந்தார்"

என்னுந் திருவாக்கு அப்பிள்ளையாருக்கு இறப்புண்டென்பாரை நிஷேதிக்கின்றது. இவற்றினுண்மை தேராதார் "ஒருபிறப்புமெய்த்தாமையுடையார்" என்பதற்கு இனியொருபிறப்பும் அடையாதவரென்று பொருள்கூறித் தமதறிவினகலத்தைப் பரப்பாநிற்பர். அதுகூடாது. என்னெனின், "உபநயனமுறைமையாகு - மிருபிறப்பினிலைமையினைச் - சடங்குகாட்டி" என்பதனோடு அது மாறுபடுதலினென்க. அந்தணராவார் பிறப்பினாலே சூத்திரரும, உபநயனகரும சம்பந்தத்தா லிருபிறப்பாளருமாயிடுதல் நியதம். முதலொரு பிறப்புடையார்மாட்டே யிருபிறப்பாளராந்தன்மை பயன்படும். எமதுபிள்ளையார் முதலே பிறவாதவராக அவருக்கிருபிறப்பிசைத்தல யாங்ஙனமெனவும், அவருக்கு முதற்பிறப்புமில்லை - இரண்டாவதுபிறப்புமில்லையெனவும், அவரந்தணர்பால் வளர்ந்தமையா லவர்சாதிக்கேற்ப இருபிறப்புக்குரிய சடங்கினைக் காட்டினரெனவும் பொருள்கோடலொன்றே யத்திருவாக்கி லமைந்துகிடக்கவும், அதனையோராது இனிவருபிறப்பில்லாதவரெனக்கோடல் வினையுமென்றற் கெட்டுணையுமிடமில்லாமைக் கினி யிவர்செய்வதுயாதோ? அன்றியும், முதற்பிறப்பினைத் தொடர்வது இரண்டாவதுபிறப்பும்,' அவ்விரண்டாவது பிறப்பினைத்தொடர்வது மேல்வருபிறப்புமாம்.

இதற்குமாறாகமேல்வருபிறப்பினைத் தொடர்வது இருபிறப்பு என்பாரதுமத மிழுக்குமதமாதற் கிடனொன்றோ? எமது பிள்ளையார் பூர்வமும்பின்னும் பிறவாத பெரியபெருமா னியிதெலயுணர்ந்த வருண்மொழித்தேவ ராசையோடுகூறிய வருமையோராற்றானுஞ் சிதைவுபடாதாகவி னிப்போதெழுந்த மதுரைச்சங்கப்புலவர்மத மணமிழந்துமாண்டதெனவே மாட்சியுடைத்து. முன்னே பிள்ளையார் முதலில்லாதவரொனறு கூறியவாறே பின்னரவர் முடிவில்லாதவரொன்பதும் போதர "ஈறிலாத் திருஞான சம்பந்தர்" என வொன்றிசைத்து அவ்வருண்மொழித்தேவ ருபசாந்தியடைந்தன ரன்றோ? இதனை நமதன்பர் யோசிப்பாராக. இனி, பிறபிறப்புகள் பாசவிக்கமுடையாருக்கேயாம. அஃதெம்பிள்ளையாருக் கின்றென்பதை

"பாசம் - மற்று - இல ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற் காயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈச னைத்தொழு தேதொழு தேகினா"

என்னுந் திருவாக்கு இனிதுபோதிக்கின்றது. இதனைத் தமது பட்சத்திற்குச் சாதகமாமாறு, பாசம்- அற்றிலராயினும் என்று பிரித்துப்பொருள்கூறவு மவர்க்குத் துணிவுபிறக்கலாம் அவ்வாறுகோடல் சங்கரனிடத்தாசையுண்டாதற் கிடர்தேடுமென்றஞ்சி யவரொருகால் வாளாகிடக்கலாமன்றிப பிள்ளையாரைப் பாசம் -அற்றிலரென்றுபேச வவர்பின்வாங்காரென அறிக. பிள்ளையாருக்குச் சங்கரனிடத்துண்டாகியவாசை

"இருந்து நாதநீ மொழிந்த வாகமத்தி
னியல்பி னானுனை யருச்சனை புரியப்
பொங்கு கின்றதென் னாசையென் றிறைஞ்சிப்
போக மார்த்தபூண் முலையினள் போற்ற."

என்பதனோடியைந்து மணம்பெறுவதே யமைவுடைத்து. உமையம்மையாருக்குச் சங்கரனிடத்துண்டாகிய வாசை தமது பாசநிவர்த்தியின்பொருட்டென்று கூறுதல்கூடுமோ? அவர் தமதுகணவரிடத்தி லாசைபாராட்டுவ தவரதியற்கை

பென்க. அவ்வாறே யெமதுபிள்ளையார் தமதுபிதாவினிட மாசைபாராட்டுவது மவரதியற்கையாமென்க. எங்கள்ஞானசம்பந்தர் சிவபெருமானிடம்பாராட்டும்பரிவு தாமச்சிவனுருக்குத் திருமகனாராயிருஞ் சம்பந்தநோக்கியேயென்பதை

"ஈசர் மிழலை யிறையவர்பா லிமயப் பாவை திருமுலைப்பால்
தேச முய்ய வுண்டவர்தந் திருமா மகனா ராதலினால்
காசு வாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகு மடிமையினால்
வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்."

என்னுந் திருவாக்கு நிறுத்தும். இதில், வாகீசரை அடிமையென்று கூறினமையாலும், சம்பந்தரைத் திருமகனாரென்று கூறினமையாலும், அவரை அடிமையென்று கூறுமையாலுஞ் சேக்கிழாரது செல்வத் திருவாக்கினுண்மை யினிது வெளியாகியது. பிதாவினிடம் பிள்ளை பரிவுபாராட்டுதலியற்கை. அந்தபிதாவினிடம் அவனுக்குப் பிள்ளையலலாத மற்றொருவன் பரிவுபாராட்டுதலருமை. இவ்விருவர் பரிவுகளுஞ் சமமாயிருப்பினும், அல்லது பிள்ளையினதுபரிவினும் அயலான்பரி வதிகரித்திருப்பினும் அப்பிதா பிள்ளையைநோக்க வயலானிடத்துத் தனதுபட்சத்தை யதிகமாகக்காட்டி யவனையுவப்பித்த லாவசியகமாம். அவ்வாறே புத்திரராகிய பிள்ளையாரிடத்தும், புருஷராகிய வரசுகளிடத்துந் திருவருணடத்திய முறைமை கண்டுதெளிக. இந்தநுட்பம் போதரவுணர்த்து மமலவாசகங்களைப் பூர்வபட்சியார் சித்தசமாதானத்துடன் தரிசித்திருப்பின், "முற்பிறப்பிலே தெளிதலின்றி சிறிதுகுறைபட்டா லனுபூதிஞானம் நிரம்பாமல் அது நிரம்புதற்பொருட்டுப் பிறப்புற்றனர்" என்று வாயில்வந்தவாறு வைது பிள்ளையாரது திருவடிக்கட் பேரபராதமிழைத்து வருந்தாரென்க. இதுநிற்க.

எமதுபிள்ளையார் சிவபரஞ்சுடரில்வேறாகாத பரதத்வப் பொருளாயினாரென்பதை யின்னுங்கொஞ்ச மெடுத்திசைப்பாம்.

(பிள்ளையார்சிவகுமாரரென்பது.)

1. "தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார"

2 "சேவாண்ட கொடியவர்தஞ் சிரபுரத்துச் சிறுவர்க்கு". [வந்து

3. "தாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானந் தம்பால்
போதமுலை சுரந்தளித்த புண்ணியத்தா யாரையுமுன் வணங்கி
[ப்போற்றி"

4 "கலைமறையோர் கவுணியனார் தம்மைக் கண்முன்
வருதியா னப்பொருளென றிறைஞ்சி"

5. "வானவர் நாயகர் மகனார் வருமுன்பு"

6. "அந்த ணர்க்கெலா மருமறைப் பொருளென வந்தார்"

7. "சேவிற் றிகழ்ந்தவர் மைந்தரான திருஞான சம்பந்தா"

8. "இறைவர்திரு மைந்தர்தமை யெதிர்கொள்வர வேற்றூர்"

9. "புரமெரித்தார் திருமகனார்"

10. "செய்ய மேனியர் திருமக னுறைமடத்தில்"

11. "ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையான் சீதொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்."

12. "தேடினா ரிருவர்க்குந் தெரிவரியார் திருமகனார்"

இவைபோல்வன வின்னும் பலவுள. இந்தவாக்கியங்கள் யாம் கற்பித்தனவல்ல. யாவுஞ் சேக்கிழார் திருவாக்காயுள்ளவை. இவற்றா லெமதுபிள்ளையாரைச் சாமுசித்தர் - வைநயிகர் - பிராகிருதரென்னும் பகுப்பிற் சேர்த்தெண்ண இடமில்லாதிருக்கவும், நமது மதுரையாசிரியருக்குமாத்திர மவரைச் சாமுசித்தரொன்று பேச வாசைமுந்தியது பேராச்சரியமென்க. யாமெடுத்துக்காட்டிய வாக்கியங்கள் பிள்ளையாரைச் சராசரங்களுக் கெல்லாஞ் சிவத்வாபிவ்யக்தியை யுண்டுபண்ணுகின்றவரெனவும், சிவனாரது திருக்குமாரரெனவும், சிவபெருமானையும் உமாதேவியாரையும் முறையே தமக்குத் தாதையாகவும் முலைகொடுத்ததாயாகவும் பெற்றவரெனவும், வேதவித்துக்கள் தியானமார்க்கத்தாலுபாசிக்குந் தியேயப்பொருளாவாரெனவும், அந்தணராவார்க்கு வேதத்தாற்

றணியப்படும் பரமகாரணவஸ்துவாயினுனெனவும், சித்கனஸ்வரூபனெனவும், சப்தரூபமாகிய வேதத்தையியக்கும் அர்த்தரூபமாகிய ஞானவடிவினனெனவும், இப்பூமியில்வளரும பாலசந்திரனெனவும், ஸ்வரபேதங்களாலாகிய கானவடிவினனெனவும் இனிது பிரகாசப்படுத்தின. இவைகளை யுய்த்துணருந் தெளிவு போதாமல் யாமேதோ (சம்பந்தருக்குப்) பூர்வமிலலாதமகிமையைப் புதுசாய்க் கற்பித்துச் சொல்லிவிட்டது போல வேறுசிலரு முள்ளம்வெதுமபி நைகின்றனர். இன்னோரதுள்ள மாசகல வேறுசில வசனங்களையும் சுவைடுவளாகிற்பாம்.

நம்பியாண்டார்நம்பிகூறியவை.

1. "காழி நாடன் கவுணியர் தலைவன்
மாமறை நோக்கி மலைமகள் புதல்வன்"

2. "காமரு கவினுர் கவுணியர் தலைவ
பொற்பமர் தோள நற்றமிழ் விரக
மலைமகள் புதல்வ கலைபயி ஞவ"

3. "ஞானச் சுடர்விளக்கை நற்றவத்தோர் கற்பகத்தை
மான மறையவறறின் வான்பொருளை—யானசீர்த்
தத்துவனை நித்தனைச் சைவத்தவ ரரசை"

4. "நிலவு முருகர்க்கு நீலநக் கர்க்குந்
தொலைவில் புகழ்ச்சிறுத் தொண்டர்க்குங்—குலவிய
தோழமையாட த தொல்லைப் பிறப்பறுத்த சுந்தரனை"

5 "வையமகிழ யாமவ ரழ வமணர் வலிதொலைய
வையன்பிரம புரத்தரற் சமமென குதலைச் செவவாய்
பையமிழற்றும பருவதது பாடப் பருப்பதத்தின்
றையலருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே."

6. "மயிலேந் தியவள்ள நன்னை யளிப்ப மதிபுணர்ந்த
வெயிலேந் தியசன்னை பரத ஜலகத் தெதிர்ப்பவரியார்
குயிலேந் தியபொழிற் கொங்கேந் தியகொம்பி னம்புகழிஇ
யயிலேந் தியமலர கண்டுள ஞய்வந்த வண்ணலுக்கே."

என்னு மிவ்வாக்கியங்கள் பிள்ளையாரைப் பதிப்பொருளென்றே தெரிவிக்கின்றன. இவற்ருல், மலைமகள்புதல்வனெனவும், சர்வகலைகளையு முபதேசிக்கின்றவனெனவும், ஞானப்பிழம்பாயுள்ளவனெனவும், மெய்த்தவத்தினர் தேடும் விழுப்பொ

ருளெனவும், வேதத்தி னரும்பொருளெனவும், தத்துவசொ ரூபரெனவும், நித்தியவடிவினரெனவும், முத்திநாதரெனவும, உலகம் வாழவந்தவரெனவும், மயிலேந்திய வள்ளலெனவும பிள்ளையாரதுபெருமை யினிது பெறப்பட்டமையா லிவற்றை நமதன்பர் விரோதித் திடர்ப்பட லழகுசெய்யாதென்க.

இவ்வாக்கியங்களுள்,6-வது வாக்கியத்தை ஈண்டு இனிது விளக்குவாம்.

மதி புணர்ந்த எயில் ஏந்திய சண்பைநாதன் மயில ஏந்திய வள்ளல் தன்னை அளிப்ப=சந்திரன் தவழப்பெற்ற மதிலசூழ்ந்த சண்பையில் வீற்றிருக்குஞ் சிவபெருமான் (சிவபாதவிருதயருடைய அருந்தவதிற்கிரங்கி) மயிலாற்றூங்கப்பட்ட வள்ளலாகிய முருகக்கடவுளைப் (புதல்வராக) அளிக்க, வந்த அண்ணலுக்கு உலகத்து எதிரப்பவா யார்=அவ்வாறு திருவவதாரஞ் செய்தருளிய சம்பந்தப்பிள்ளையாருக்கு உலகில நிகராவார யாவர் என்று கொள்ளத்தக்கது.

இடையிலுள்ளவை அண்ணலுக்குரிய விசேஷணம. பொழில் குயிலேந்திய=சோலைகள் குயில்களை ஏந்தவும், கொம்பின் அம்பு கொங்கு ஏந்திய=கிளைகளிற் றளிர்த்ததளிர்கள் வாசனை ஏந்தவும, கழி மலர் அயில் ஏந்திய=உவாக்கழிகள் மலர்களால் அழகையேந்தவும, கண்டு உளஞய் வந்தஅண்ணல்=செய்பவராயவதரித்த அண்ணலெனவியையும. எனவே, பாலையைச் சோலையொடுகலந்த நெய்தலாக்கியபெருமான் என்றபடியாம். இதனைச் சம்பந்தா திருச்சணைபைவிருத்தம "கள்ளம் பொழினனி பள்ளிதடங்கட மாக்கியஃதே- வெள்ளம் பணிநெய்த லாக்கியவித்தகன" என்பதனுனுந்தெளிந்திடுக.

அம்பு=தளிர்.

கழி என்பது இன்னிசை யளபெடையாய்க் கழீஇ எனநின்றது. "கெடுப்பதூஉம்" என்னுந திருக்குறள்போன்ற திதுவெனவறிக.

அயில்=அழகு.

காணுதல்=செய்தல். இதனை "கலந்தவர்தமைப்பிரித்துக் கலகங் கண்டிட வல்லானும்" என்பதிற்போந்த "கண்டிட" என்பதனோடியைந்ததெனவறிக.

எதிர்த்தல=நிகர்த்தல்.

இவ்வாறு தெளியும் விவேகிகள் எமது பிள்ளையாரை "மயிலேந்தியவள்ளல்" என்றுகூறப் பின்னிடையாரென்க. இது நிற்க.

திருத்தொண்டத்தொகை

"எம்பிரான் சம்பந்த னடியார்க்குமடியேன்"

என்று கூறுகின்றது. எம்பிரான் என்று ஸ்ரீசுந்தரமூர்த்திகள் எமதுபிள்ளையாரைக் கூறிய வருமை யுணர்ந்தவர்கள் அப்பிள்ளையாரைப் பரமபதியென்று துணிதற்கிழுக்கென்னே? விரிநூலாராகிய சேக்கிழார்சுவாமிகளும், வகைநூலாராகிய நம்பியாண்டார் நம்பிகளும், தொகைநூலாராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளும் பிள்ளையாரைப் பரமபதியென்றே துணிந்து கூறினார்களாகையால, இவற்றோடு முரணவுரைப்பாரமதமே மூர்க்கமதமாயினதறிக. வன்றொண்டப்பெருமான் சம்பந்தரை "எம்பிரான்" என்றதுபோல திருமூலரை "நம்பிரான்" என்று கூறினரெனின், அது "எமபிரான்" என்று பாராட்டிய சுதந்தரத்தன்மையையுஞ் சிறப்புரிமையையும் பெயதாதென்க. இது நிற்க.

திருப்புகழ்

1. "பத்தர் சமணர்கள் மிகவே கெடவே
தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க வனல்புனல் திருவே டெயவே - யுமையாடன
புத்ர னெனவுரை பகர்வோன் மறைநூல்
கற்ற தவமுனி பிரமா புரம்வாழ்
பொற்ப கவுணியர் பெருமா னுருவாய் - வருவோனே"

2. "உபயகுல தீபவங்க - விருதுகவி ராஜசிங்க
முறைபுகலி யூரிலன்று - வருவோனே"

3. "பஞ்சவ னீடுகூறு - மொன்றிய தாபமோடு
பைந்தமிழ் வாதுகூறு - சமண்மூகர்
பண்பறு பீலியோடு - வெங்கழு வேறவோது
பண்டித ஞானநீறு - தருவோனே"

4. "பறிதலைச்சமணரைக் - குலமுதற்பொடிபடக்
கலகமிட்டுடலுயிர்க் - கழுவினுச்சியினில்வைத்-திடுவோனே"

என்று கூறுகின்றது. இவைபோன்றபாடல்கள் திருப் புகழி லின்னும் பலவுள. இதற்காக்கியோராகிய அருணகிரி நாதர் "கந்தரந்தாதி"யிற் கந்தனை சம்பந்தனென்று கூறிய பகுதிகளை யாம எமது ஆசாரியபிரபாவத்தி லெடுத்துப்பிரகா சப்படுத்தி யிருக்கின்றோம். அன்றியு மிவ்வுண்மை சிற்றம்பல நாடிகள்- சிவப்பிரகாசசுவாமிகள் - சிதம்பரசுவாமிகள் முத லியோரது திருவாக்குகளிலும் பெறப்பட்டிருக்கின்றது. அ வைவருமாறு.

சிற்றம்பலநாடிகள் அருளியது

"ஓமெனுந் தாரகமொன் பொருள் சிவனுக்
காமென மொழிந்தே யருட்குரு வானோன்
பொற்புறு பொதிய வெற்புறு முனிக்கு
நற்பொருள் விளக்கு ஞானதேசிகன்
பொய்வழிச் சமணப் புலையிருள் நீக்கிச்
சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி
முருகன் குமரன் மூவிரு முகன்மால்
மருகன் சிவனருண் மைந்தன் கந்தன்"

சிவப்பிரகாசசுவாமிகள் அருளியது.

"மருகற்பெ ரும்பதியி லொருகற்ப ணங்குதொழ
மணவாள னுவியுதவா
மயிலைக்க ணென்பினுயிர் பயில்வுற்றெ ழுந்துவர
வருவாயெ னழுனமையா
ஒருகர்க்க ணங்குதரு முருகர்க்கு கந்தவரன்"

சிதம்பரசுவாமிகள் அருளியது.

1. "குண்டைச் சமணக் கரிகளை யடுகோ ளரியே தாலேலோ
கும்பத் திடுமென் பைத்திரு விற்றரு குழகா தாலேலோ"

2. "உமையமை தன்மா ரமுதக் கடலுண் டுயர்சோதிக்
கமைவுறு பதிகப் பெருமழை பொழியும் அருள்வானே"

இன்னன பலவுள. அவை ஆசாரியபிரபாவத்தி லெடுத் தோதப்பட்டிருக்கின்றன. இதுநிற்க.

## திருவிளையாடற்புராணம்.

1. "கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவ நோக்கிக் குறையிரந் தனையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ் செய்வாம்"

2 "காயலை முனிபுங்கவைத்தி"

3. "வானநாயகனைத் தருக்க குணர்த்தினார்" [ர்"

4. "மைப்பயில் களத்தான் மைந்தா தொழுது தமடத்திற் போனார்"

5 "உள்ளவிழ்ந்த முலைசுரந் தொழுக்குபா லருத்தியே
துள்ளிமேயு கன்றுபின்னர் விட்டார்த்துச் செல்லுமாமென
வெள்ளியம் பலத்துளாடும் வேதநாத காதலக்கூர்
பிள்ளைபோன மாறுநம்பி நாட்டிமேயொடெய்தினார்"

6 "மன்றுளாடு மடிகண்மைந்தர் மெய்ம்மலர்ந்து பேசுவார்"

7. "அத்தனார் விடங்கதாச னுயிர மதியங் கண்ட
பத்தியே இயராய்த் தோணி பூரநாதிற் கராசை நீயென்
மைந்தனை பிள்ளையோ மெருப்பாய் வருவிகண நீறுசாதிச்
சிரமேதநீ மாறாவங்கூறத் திருவருள் சுரந்து நின்றார்"

8. "சென்றவன் துணைவராய் நின்று நிருமல ஞான மீந்தா
ரொன்றுவகண் பூரெஞ்சி யமைய சிவையா ரளித்த மேடு
சென்றதிங் கேடுதீர் நீவா யிந்துயர் செல்வற் கேற்ப
நன்றதைத் தருதி யென்று நான்முகச் செம்மலன்றோர்"

9. "உமைதையார் கவாக்குமீளத் தந்தமே டதனை வாங்கி"

என்று காழிவிரகரைப் பிரஸ்தாபித்து அவர் சிவஞானது மைந்தரெனபதை இனிது பிரகாசப்படுத்திவிட்டது. இவ்வாக்கியங்களில், முதல்வாக்கியம் "தக்கார் தகவிலரென்ப தவரவ-ரெச்சத்தாற் காணப்படும்" என்பதற்கேற்பச் சிவஞானும, அவரது திருக்குமாரராகிய சம்பந்தருஞ் செய்த செயல்களை வியந்து அவரது ஸாயுஜ்யாதிசயத்தைத் துதித்தவாறறிக. 2-3-4-6-9-வது வாக்கியங்கள் வெளிப்படை. 5-வதுவாக்கியம் வைகையில் ஏடுவிடச்சென்ற பிள்ளையாரை அவரது தந்தைதாயர்களாகிய சிவபெருமானும, உமாதேவியாரும் பின்சென்ற வருமையை யுபமானவாயிலாக நிரூபித்தவாறாயிற்று. தன்கன்றினையே தாய்ப்பசுதேடிச்செல்லுமாபோலச் சிவனுமுமையுந் தமதுமகவையே தேடிச்சென் றின்புற்றமை வெ

ளிப்பட்டமையால், பிள்ளையார சிவகுமாரரென்பது ஸ்திர மாயிற்று. 7-8-வது வாக்கியங்களில் "என்மைந்தனு மிளையோ னெப்பாய்" எனவும்,"அறுமுகச் செம்மலன்னூர்" எனவும போ நததைவ பிள்ளையாரை முருகக்கடவுளுக்கொப்பாகச் சொல் லியவா றென்னையெனின், அவ்வாசங்கையை விடுக்குதும். "என்மைந்தனு மிளையோனெப்பாய்" என்று பிள்ளையாரைநோ க்கிக் கூறினவர் சிவபெருமானல்லர். அவரது அவதாரமாகிய அந்தணர்பெருமான். அவ்வந்தணர்பெருமான் தாம் சிவமெ ன்று காட்டிக்கொள்ளாமல் பிள்ளையாரிடம் திருவிளையாடல புரிந்தாராகையால், பிள்ளையாரை "என்மைந்தனு மிளையோ னெப்பாய்"என்றது தகும். அவரமைத்ததற்கேற்பஅவரதுசந் நிதியினின்றபிள்ளையாரை மீண்டும் "அறுமுகச்செம்மலன்னூர்" என்றதுந் தக்கதே. வேதியர்பெருமான் தம்மைச் சிவ மென்று காட்டிக்கொள்ளாமல் வெளிவந்தபோது எனக்கு மக்களிருவருளரெனவும், அவருள் இளையமகனையே நீ யொ த்திருக்கின்றாயெனவும பொருளுண்டாகப் பிள்ளையாரை நோக்கி "என்மைந்தனு மிளையோனெப்பாய்" என்றுகூறினமை யால், அந்தப்பிள்ளையாரே அவர திளையமைந்தராயினாரென லமைவுடைத்தென்க. பிள்ளையார் வைகையிலிட்ட வேட் டினைக்கவர்ந்து பின்னரதனை யவருக்குக்கொடுத்தருளிய வே தியர்கோலங்கொண்ட சிவபெருமானையே யன்றோ "தாதை யார் கவர்ந்து மீளத் தந்தவே டதனை வாங்கி" என்று பரஞ்சோதி யார் மீட்டும் பிரகாசப் படுத்தினர்? இவ்வுண்மைகளை யுணர்ந் தோர் ஞானசம்பந்தர் சிவகுமாரரென்பதி லோராசங்கையுங் கொள்ளாரென்க. விரிக்கிற் பெருகும். இதுநிற்க.

சீகாழிப்புராணம

1. "ஞானசம் பந்த வள்ளலாய் முருகன் வந்துதித்த
பான்மை யுண்டு"

2. "தோன்றலா மயில்வேன் முருகனைப் பெறுவான
ரேய்தவம் புரிந்தனன்"

3. "மதலையாய் வந்தனன் கந்தன்"

என்று தெரிவிக்கின்றது. இவ்வாக்கிய சகலங்களைப் பூர் வாபரசம்பந்தங்களை யொட்டி விசாரித்திடின், ஞானசம்பந்

நர் சிவகுமாரரென்னுஞ் சித்தாந்தம் சிர்குலையாது சிறந்திடுமென்க. இதுநிற்க.

திருநெல்வேலிப்புராணம்

1. "யாமாய் நின்ற ஞானசம்பந்தன்"
2. "பூண்ட வெண்டா ளங்களாற் புகழ்சிவி கையின்மே
லாண்ட தம்பிரான் மதலைவந் தணைதலும்"
3. "மன்றுளார்தரு மதலையுஞ் சிவிகைமேல் வந்தார்"
4. மைத்திகழ் களத்தர் மதலைக் கெதிர் வணங்க"
5. "நந்த மெய்ச்சிவ மாந்திரு ஞானசம் பந்தர்"
6. "கவுணியர் குலத்ததிபர் தம்மைமுனி காணு
கவுரிதரு மைந்தரிவ ரென்றனர் கலந்தார்
கவிழ்தரு கண்ணீர்பெருகு காதலின் வணங்கக்
கவுரிமக னஞ்சலி கலக்கியிரு மென்றான்."
7. "எண்டிசைக்கணு மிசைபுரி யிறைவர்த மைந்தர்"
8. "திருஞானசம்பந்த சிவக்கொழுந்தை"
9. "கண்ணுதலார் மதலை"

என்று ஞானசம்பந்தரைப் பிரஸ்தாபித்து, அவர் சிவகுமாரரென்பதை இனிது ஸ்தாபித்துவிட்டது. இவ்வாக்கியங்களில் முதற்கட்போந்த "யாமாய்நின்றஞானசம்பந்தன்" என்பது ஸ்ரீமுருகக்கடவுள் தேவபாண்டியனைநோக்கிக் கூறியதென்றறிக. 2- 3- 4- 7- 9-வது வாக்கியங்கள் வெளிப்படை. 5-வதுவாக்கியம் சத்தாகியசிவமே ஞானசம்பந்தரென்று தெரிவித்தது. 6-வதுவாக்கியம் அகத்தியபகவான் ஞானசம்பந்தரை உமாசுதராக வறிந்தணைந்து கண்களினீர்பெருகநின்று வணங்கினாரெனவும், அவ்வுமைமைந்தர் முனிநாதனை நீர்வணங்கியதுபோதும் - இனியிங்கிருக்கலாமென்று உபசரித்தாரெனவுந் தெரிவித்தது. இனி 8-வதுவாக்கியம் "சிவக்கொழுந்து" என்றுகூறி, எமதுபிள்ளையார் ஆநந்தவடிவினராதலை இனிது தெரிவித்தது. இதுநிற்க.

### உபமந்யுபக்தவிலாஸம்

1. "ஜகத்யந்ததுர்ப்பிக்ஷே - ஸ்ரீஹவேசஶிவநந்தநௌ
கருணாம்கர்த்துகாமஸ்ஸந் - சப்புஸ்வப்நேஜகாததேச

2. "ஶ்ரீதேவீஸ்தந்யாய - சங்காஸ்தத்ஸூதாயச
தௌஸம்பந்தநாதாய - டங்கம்ர்யூநார்க்கமந்யதஃ
ஸ்ரீஹ்வேசாயஸ்யாபருத்யாய - பஹாரக்கம்ப்ரத்யஹம்ததௌ
ஸ்நேஹோதஸ்யோப்யயம்த்ருஷ்டஃ விசேஷஃபுத்ரப்ருத்யோஃ"

என்றுகூறுகின்றது. இவற்றுள், முதல்வசனத்தில எம துபிள்ளையார் சிவநந்தனர் என்று படிக்கப்பட்டனர். இரண் டாவதுவசனத்தில், ஞானசமபந்தர் சிவனுரதுபுத்திரராயின மையால் வட்டத்தோடு காசுபெற்றாரெனவும், வாகீசா அடி யவராயினமையால வட்டமின்றிக் காசுபெற்றாரெனவும் படி க்கப்பட்டிருக்கின்றது. இதனை முன்பு சேக்கிழார்திருவாக்கா னும் வெளிப்படுத்தினேம். இதுநிற்க.

### ஹாலாஸ்யமாஹாத்மியம்

1. "ஸ்ரீமத்ப்ரஹ்மபுரேபுண்யே - ப்ராஹ்மணஸ்தபஸஃஸ்தலே
சிவபாதாப்ஜஹ்ருதய - இதிகச்சிதபூதவிஜ ஃ"

2. "புத்ரதாமகமத்தஸ்ய - சரஜந்மாசிவாஜ்ஞயா
அசிவாயாஸஜ்ஜநாநாம் ஸஜ்ஜநாநாம்சிவாயச"

3. "ந்ருபாத்யாஸ்ஸஜ்ஜநாஸ்ஸாவே - ப்யஸஜ்ஜாஹரம்குஹம்
நநந்துஃஜ்ஞானஸம்பந்தம் - சிரஃகய்பைர்ஹ்ருதாகிர"

என்றுகூறுகின்றது. இவற்றுள், 1 - 2-வது வசனங் கள் பிரமன்தவம்புரிந்த இடமாகிய சிறந்தபிரமபுரமென்னும் பெயரையுடைய சீர்காழியிலே சிவபாதஹ்ருதயரென்னும் பிராமணரொருவரிருந்தார். அவருக்குச் சுப்பிரமணியக்கட வுள் சிவபெருமானுடைய ஆஜ்ஞையினால் தீயவர்க்குத்தீமை செய்யும்பொருட்டும், நல்லவர்க்கு நன்மைசெய்யும்பொருட் டும் புத்திரராந்தன்மையடைந்தார் என்று தெரிவிக்கின்றன. 3-வது வசனம் பாண்டியராஜன் முதலிய சற்சனர்களெல லோரும் அசற்சனர்களையழிக்கின்ற சுப்பிரமணியப்பெருமா னாகிய ஞானசம்பந்தவள்ளலை மனவாக்குக்காயங்களால் வழி பட்டு மகிழ்ந்தார்கள் என்று தெரிவிக்கின்றது. இது நிற்க.

## காஞ்சிமாஹாத்மியம்.

"மத்பக்தஸ்யேச்சயஸம்பூத: - ப்ரதாஸ்யதிஸரூபதாம்
தத்ர தத்ர சஸமயபக்தோ - குஹாமசோபக்திமாக்ஸுதீ:
த்வத்பக்தகர்வசிரசாய - மத்ஸாரூப்யமவாப்ஸ்யஸி"

என்று கூறுகின்றது. இதில் விஷ்ணுவைநோக்கி என்னுடைய பக்தனாகிய சமயபக்தன் உனக்குச் சாரூப்பியங்கொடுக்கப்போகிறான். பக்திமானாகிய சமயபக்தன் குமாரஸ்வாமி அபிசத்திரு லவகரிபபான. அவனால் உன்னுடைய பக்தஜநகர்வாபஹார நிமித்தமாய என்னுடைய சாரூப்பியத்தை நீ அடைவாய் என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தளினார் என்று பெறப்படுகின்றது.

இவ்வசனங்களைப் பரியாலோசிக்கும் பண்டிதர்கள் பிள்ளையார் முருகக்கடவுளவதாரமாயுள்ள வாய்மையை யெளிதினுணர்வார்கள். தமிழ்நூல்கள் மாத்திரமேயன்றிக் கீர்வாண நூல்களும் பிள்ளையார் சிவகுமாராதலை யினிதுதெளிவித்திடவு மிவற்றையோராமலேமீனும் மதியாதூர்ந்தனர் நமதுமதுரையாசிரியனார்? இம்மட்டோ, இன்னுமிவ்வாறெழுந்த கோவைக்கும்பிரமாணங்கள்பலவுள. இவற்றைத்தெளிந்துணர்ந்தவர்கள் பிள்ளையாருக்குப பூர்வஜன்மகற்பித்த பூர்வபட்சியினது விபரீதத்தைக்கண்டு அஞ்சுவரென்க. அதனாலிவர் முற்பிறப்பிற் பிள்ளையார் கேட்டல சிந்தித்த றெளிதல்களை யுணர்ந்தாரெனறு பிரசங்கித்தது நிஷ்பலமாயிற்றெனலே யமைவுடைத்து. இனிச் சிவஞானயோகிகள் "ஆளுடையபிள்ளையார்முதலாயினார்க்குத தவமின்றியும் ஞானம்நிகழ்ந்தவாறென்னையென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய்துழியென வீண்டெவலியுறுத்தார்" என்று சிவஞானபோதச் சிற்றுரையிலெழுதியிருப்பதை நமதன்பரெடுத்தெழுதிக்கொண்டே பிள்ளையாருக்கு முற்பிறப்பினை நிறுத்துமெனின், அதுகூடாது. அச்சிற்றுரை பிள்ளையாரது திவ்யசரித்திரங்களையாவது, அவரது தோத்திரங்களையாவது பிரதிபாதிக்கவெழுந்த நூலன்றாகையாலும், அதிலவரெழுதிய வாக்கியம் பூர்வநூல்கள் பலவற்றிற்கு விரோதப்ப

ட்டொதுங்கலாலும் அவற்றைப் பிரமாணமாகத்தேடி வருந் துறுர் பெரியோரென்க. விரிக்கிற்பெருகும். இதுநிறக.

(ஞானவிசாரம்.)

இவர் "சிவனடியே" என்னுஞ்செய்யுளில் பரவபரஞான ங்கள்கூறுதல் கூடாதென்று முதல்மறுததார். அமபட்டினி ல்லாமல் கேட்டல - சிந்தித்தல - தெளிதல் - நிட்டைஞான ங்களு மதிலமையாவென் றலர்துாற்றினுர். இவற்றுள், பர வபரஞானங்கள் யாமகூறினவலல. ஆகையா லவ்விஷயத்தி லெமக்கு விவாதமின்று. கேட்டலாதிஞானங்கள் யாமகூறி யவாகலி னவற்றைக் குறைகூறியதைமாத்திரம் ஈண்டுவிசா ரித்திடுவாம். இவர் பரவபரஞானங்களையும், கேட்டலாதி ஞானங்களையும் பொருந்தாதனவென்று புன்றமைபா லிவ் விருநிறத்துஞானங்களுக்கும வேறானஞானமே யினியிவா து ஞானமாதல் வேண்டும். அங்ஙனமின்றி எமதுகேட்ட லாதிகளையேகற்று இவரெமக்குப் புதுமைகாட்டினுர். எங்ஙன மெனின், யாம் "சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானம்" என்பதைச் சிந்திக்குஞானமென்று கூறினும. இவரதனைத் தெளிதலினிகழு மிரணடுஞானங்களி லொருஞானமென்றூர். யாம், "பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞானம்" என் பதைத் தெளிதன்ஞானமென்று தெரிவித்தாம். இவரதனை த் தெளிதலினிகழு மிரண்டுஞானங்களில் மற்றொருஞானமெ ன்றுர். யாம் "உவமையிலாக்கலைஞானம்" என்பதைக் கேட் டன்ஞானமென்று கிளத்தினும். இவரதனைக் கலைஞானமெ ன்றே கழறினர். யாம் "உணர்வரியமெய்ஞ்ஞானம்" என்பதை நிட்டையென்று நிறுவினும். இவரதனை அநுபூதிஞானமென் றறைந்தனர். யாம் கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நி ட்டைகளைவிடாமல் கூறினும். இவர் கேட்டல் - சிந்தித்தல் களைக்கழித்து எஞ்சிய தெளிதல் - நிட்டைகளைமாத்திரங் கூ றினுர். யாம் நிட்டைஞானமென்பதையே யிவரநுபூதிஞான மென்றனர். கேட்டல் சிந்தித்தல்கள் அந்தப்பாடலிற்பெறப்ப டவில்லையென்ப திவரதுநினைவேயன்றி யவையுமதிற்பெறப்ப

ட்டனவாகவே யிவர் விளக்கியுள்ளார். எங்ஙனமெனின், "பிள்ளையார் முற்பிறப்பிலேயே கலைஞானத்துள் கன்மகாண்ட உபாசனாகாண்டங்களை முற்றுமுணர்ந்து ஞானகாண்டத்திற் கேட்டலுஞ் சிந்தித்தலுமாரம்பி" என்றிவர் கூறியிருப்பதில், கேட்டல் சிந்தித்தல்கள் வியக்தம். இவ்விருஞானங்களு மிவரபிப்பிராயப்படிக் கலைஞானத்தி லந்தர்க்கதம. இக்கலைஞானத்தை "உவமையிலாக்கலைஞானம்" எனபதற்குப்பொருளாக வமைத்தனா. இவற்றை யுற்றுநோககுழி "உவமையிலாக்கலைஞானம்" என்பதற்குக் கேட்டல சிந்தித்தலகளும், "சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானம் - பவமதனையறமாறறும் பாங்கினிலோங்கியஞானம்" எனபவைகட்குத் தெளிதலும, "உணர்வரிய மெய்ஞ்ஞானம்" எனபதறகு நிட்டையும பொருளாக நிலைத்தனர். யாம கூறியஞானங்களையே யிவருங்கூறிவிட்டு, "சிவனடியையேசிந்திக்குமசிந்தித்தன முதலிய நானகுஞானங் கூறுவோருரையும் பொருந்தாமை யெளிதிலுணரப்படும்" என்றது என்னையோ? இவரது புத்தியின்பிரமைக்கே யாம் அதிகமாக வியசனப்படுகிறோம. இனி யிவர் "கலைஞானம்" என்பதற்குக் கன்மகாண்ட உபாசனாகாண்ட ஞானகாண்டங்கண் மூன்றினையுங் கொண்டவாறு யாமகொள்ளாமையால், இவரதுரையோடு எமதுரை பொருந்தியதின்றெனின் - அவற்றுள், ஞானகாண்டத்தை யாமங்கீகரித்தமையா லெஞ்சியகன்மகாண்டஉபாசனாகாண்டங்களை யிவரதிகமாகக் கண்டுகூறிய வருமையாயுள்ளன. இவர்தேடியவருமை ஞானிகள்கழகத்து நகையுண்டழிதலா லதனை யாம கூறாதுவிடுத்தா மென்க. எங்ஙனமெனின், எமது பிள்ளையாரைத் 'தாவிறனிச் சிவஞான சம்பந்தராயினார்" என்று ஸ்ரீ சேக்கிழார்பெருமான் கூறினார். அதனாலவருக்கு ஞானசம்பந்தமேயன்றி அதனோடு வேறுசமபந்த முண்டாயினதாகக்கூறுதல அசங்கதம். இதனைநிறுத்தற் கிவ்வொருவாக்கியமேயன்றி "ஒருநெறியில் வருஞானங் கொடுப்பதனுக்கு" எனனும் வாக்கியமும், "எண்ணரியசிவஞானத் தின்னமுதங்குழைத்தருளி" என்னும்வாக்கியமுஞ் சான்றாயுள்ளன. அன்றியும், பிள்ளையாரை ஞானசமபந்தரென்பதேயன்றிக் கன்மசம்பந்தர் உபாசனாசம்பந்தர் என்றுகூறும் வழக்கின்று. இவற்றைத்தெ

ளிந்திடாமல் பிள்ளையாருக்கு யாம் கனமகாணடஉபாசனுசா ண்டங்களைக் கூறவில்லையென்று கமதன்பாதுக்கித்தது அவா று கன்மசம்பந்தமேயாமென்றறிக. இவர்தேடிய மிகைஞானங் கழிந்ததுணாவா ரிவரொமதுகேட்டலாதி ஞானங்களையே கூறுவெளிவந்த மகாபண்டிதரென்றுகூறப் பின்னிடாரென்க. இ வரொபபாற்கற்ற கேட்டலாதிஞானங்களை யொழுங்குயாறி யு பதேசித் திடர்ப்பட்டபெருமையை இன்னுஞசற்று எடுத்திசைபபாம.

இவா பிள்ளையார் மூறபிறபபிற கேட்டல-சிந்தித்தல்க ளும், தெளிதலிற பெரிதுபாகமு மெய்திஞெனவும், அத தெளிதலிலெஞ்சிய சிறிதுபாகததையும, மெய்ஞ்ஞானத்தை யும பின்னரடைநதா ரெனவும், அவறறு ளிவர்முறபிறபபி லெய்திய ஞானங்களைக்கூறுபல அனநதரமெய்திய ஞானங்க ளைய சேக்கிழார்கூறினரெனவும் பிரஸ்தாபித்து, அதனை சிவனடியேயெனனுமபாட லுக்குப் பிரமேயமாக்கினர். சண்டி ளிபிவாறுதெளிவை யாம விசாரிக்கத்தக்கது. என்னெனின், இவர் தெளிதன்ஞானத்தின் சிறிதுபாகத்துக்கு அச்செய்யுளி ன்முதலிரணடடிகளை யொப்படைததாரன்றே? இனியத்தெ ளிதலின் பெரிதுபாகத்துக்கு யாதுபிரமாணததையோ தேடி யொப்படைப்பார? இவர் சமபந்தரடைநத தெளிதலின றபபாகத்தைச் சேக்கிழார்வாக்கால் விளக்கிக்காட்டியதற கு ''அவனேதானேயாகியவந்நெறி - யேகனு யிறைபணிநிற்க - மல மாயைதன்னொடு வல்வினையின்றே'' என்னுஞ் சிவஞானபோத சூத்திரததைப பிரமாணமாக வெடுததிசைத்தார. இதில், ''அவனேதானேயாகியவந்நெறி - யேகனுகி'' என்றவளாயில ''சிவனடியேசிந்திக்குந் திருப்பெருகுசிவஞானம்'' என்பதன்பொ ருளும், ''இறைபணிநிற்க - மலமாயைதன்னொடு வல்வினையின் றே'' என்றவளாயில் ''பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம்'' என்பதன்பொருளுமாமெனவும் பிரசங்கித்தார் இவராருமையாகத்தேடிய வச்சிவஞானபோத சூத்திரத்தை யிவரொடுத்துக்கொண்ட தெளிதலி னறபபாகத்துக்கே யொப் படைத்தது அதிக பரிதாபமென்க, இப்பத்தாஞ்சூத்திரம

தெளிதலினது அற்பபாகத்தையே விளக்குவதாயினிவரது தெளிதலினதிகபாகத்தை விளக்குவதாயசூத்திரம் வேறுயாதோ இனியெடுத்திசைக்கற்பாலது? இந்தப் பத்தாஞ்சூத்திரத்தையே யிவர் தமதுபிரணாதாரமாகத்தேடித் தெளிதன்ஞானத்தைத் தெருட்டப்புகுந்து கடைசியாக வதனைத் தெளிதலின் முந்நிறைக்கூறுக்கு மூலமாக்கிவிட்டது கேவலம் அசங்கதமென்க. இனியிவருக்கு அப்பத்தாஞ் சூத்திரம் தெளிதனா ஞானத்தை யுணர்த்தப்புகுந்ததாகத் தெருட்டியவாசிரியர் யாவரோ தெரியவில்லை. உரையாசிரியரெவருங்கூறுதவதனை யிவர்சூத்திரத்தின் றலையிலேற்றிய தவ்வுரையாசிரியர் யாவரினுந் தாமேபெரியரென்றெண்ணி யிறுமாந்ததன்பயனேபோலும்.

ஒருகாலிவர் சிவஞானயோகிகளது சிற்றுரையில் பத்தாஞ் சூத்திரத்தின்கீழ் "ஆன்மசுத்திப்பயனாகிய பாசவீடுதியைச் செய்துகொள்ளுமாறும், மேற்சிந்தனைசெய்தபொருளைத் தெளியுமாறு முணர்த்துமுகத்தானுணர்த்துத லிப்பத்தாஞ்சூத்திரத்தின்கருத்து" என்றிருப்பதைப் பார்த்துமருண்டு ஆண்டுப் போந்த தெளியுமென்னுஞ்சொல்லைத் தேடியெடுத்துக்கொண்டு வெளிவந்திருக்கலாம். அத்தெளியுமென்பது கேட்டலாதிகளிற் சேர்ந்த தெளிதலன்றும். இப்பத்தாஞ்சூத்திரம் தெளிதன்ஞானத்தை யுணர்த்துமாயின், இதற்கு முன்னர்க் கேட்டல் சிந்தித்தல்களை யுணர்த்திய சூத்திரங்கள்யாவை? இனி நிட்டையையுணர்த்துஞ் சூத்திரம்யாது? இக்கேட்டலாதிஞானங்களை எட்டாஞ்சூத்திரத்தினவாகச் சிவஞானசித்தியாரில் அருணந்தி சிவம் விதந்தோதி யருளினர். இங்ஙனமாக, இவர் பத்தாஞ் சூத்திரத்திற் றெளிதலைத் தேடியெடுத்தது இவரது தெளிவிருந்தபடியேயாம். அதவா வதனை யிவர்கருதியவாறு கொள்ளினும் அது பொருந்தாதது. ஏனெனின், அப்பத்தாஞ் சூத்திரமானது "சிவன் உடனாய்நின்று அறியவும் வேறுகாணப்படுமாறின்றி யானேயறிந்தேனென்னும்படி உயிர் தானேயா யொற்றுமைப் பட்டு உயிரின்வழிநின்ற வப்பெற்றதநிலைபோல, ஆன்மா வமுதல்வனோடுடனாய்நின்றறியினுந் தானென வேறு காணப்படுமாறின்றி

அவனோடொற்றுமைப்பட்டு அவனிறைபணியின்வழுவாது நிற்பின், ஆணவமலமு மாயாமலமுமாகிய விவ்விரண்டினோடு கன்மமலமுமி ல்லையாய் முடியும்" என்று போதிக்கின்றது. இதிலான்மா வி றைவனோடொற்றுமைப்பட்டு, அவனிறைபணியினிற்றலை முன்னும், மலமாயாதிகளினது நிவிர்த்தியைப் பின்னும் கூறியி ருக்கின்றது. மேல்சிற்றுரையிற்காட்டிய ஆதாரவிலோவெனின், பாசவிடுதிமுன்னும் தெளியுமுணர்வுபின்னுங் கேட்கப்படுகி ன்றன. இவை யொன்றோடொன்று விரோதித்தலா லிவர் தேடியவாதார விவரைத் தியங்கவிட்டதெனலே யமைவுடை த்து. அன்றியுமிவர் பத்தாஞ்சூத்திரமுழுதுந் தெளிதன்ஞா னத்தைப் போதிப்பதென்றார். இவரெடுத்துக்கொண்ட சி ற்றுரை அப்பத்தாஞ்சூத்திரம் "ஆன்மசுத்திப்பயனாகிய பாசவி டுதியைச் செய்துகொள்ளுமாறும், மேற் சிந்தனைசெய்தபொருளைத் தெளியுமாறு முணர்த்துவது" என்று தெரிவிக்கின்றது. பாசவிடு தியும், தெளியுமுணர்வும் வேறுவேறுவிடயமென வுரைத்த சிற்றுரையோடு அவற்றை யொரேவிடயமென வுரைக்கு மி வரதுபோதம் பிணங்குதலா லினியிவரதுமதம மனமழிந்த தெனலே யமையும். இவ்வாறவதிப்படுத்தற்பாலதாகிய விவ ரதபசித்தாந்தங்கழியவே, அப்பத்தாஞ்சூத்திரம் "பாசக்ஷயம் பண்ணுமாறுணர்த்துதனுதலிற்று" என வுரையாசிரியர் கூறிய கருத்துரையை மேற்கொண்டதெனலே முடிவென்றறிக. இ வ்வாறு தெளிந்திடாம லச்சிற்றுரையிற்போந்த "தெளியும்" என்னுஞ்சொல்லைக் கண்டெடுத்து, அதுவே தெளிதன்ஞான த்துக் காதாரமெனக் கடைப்பிடித் திவராரவாரித்த திவர து ஞானபாவத்தையே வெளியாக்கியதென்க. இப்பத்தாஞ் சூத்திரத்துக்குக் கருத்துரைகூறிய வுரையாசிரியருளொ ருவரும் அது தெளிதன்ஞானத்தைப் போதிப்பது என்று கூ றமுந்திலர். அதற்குச் சிவஞானமுனிவர் கூறியவாறு பாச க்ஷயத்தையே கருத்துரையாக வங்கீகரித்தனர். இன்னுமச் சிவஞானயோகிகள் சிவஞானசித்தியா ருரையில் "அவவிருவ கைப்பயனுள் அப்பெத்தநீக்கமாமாறு கூறுதற்கெழுந்தது பத்தாஞ் சூத்திரம்" என்றுகூறியதுமுய்த்துணர்ந்தடங்குக. அன்றியும், "அறுத்திடன்மலங்கள்பத்தே" என்று பத்தாவதுசூத்திரக்கருத்

தையுணர்த்திய ஆப்தவாக்யமும் பிரமாணமாமென்க. இதுகாறும் யாந்தெளித்துக்காட்டிய வுண்மைநியாயங்களால சிவஞானபோதத்தின் பத்தாஞ்சூத்திரத்தைத் தெளிதன்ஞானத்தைப் போதிப்பதெனவும, அது "சிவனடியே" என்னுஞ் சேக்கிழார்பாடலின் முதலிரண்டடிக்குப் பொருளாமெனவும (வியவஸ்தைகெட) நமதன்பர் பிரசங்கித்தது நிஷ்பலமாயிற்றென்றறிக. அதனாலிவர் பிள்ளையாருக்குக் கற்பித்த பூர்வஜந்மமும், அவரந்தஜந்மத்திலெய்திய கேட்டல சிந்தித்தல தெளிதல்களும, பின்னரெய்திய தெளிதலின்குறைவும் வீணவார்த்தையாய் விலகியவெனலே சித்தம.

இவ்வுண்மை தெளிந்தின்புறுவார் பிள்ளையாருக்குப் பூர்வாபாசங்களையும, தவத்தின் மிகுதிகுறைவுகளையும் பாவிக்கப்பார்களோ? இவ்வாபாசங்களொன்று மறுகப்பெறாத பரதத்வப்பொருளாயினார் தாமென்பதை அப்பிள்ளையாருமேயன்றோ.

1. "பதியானஞானமுனிவன்"
2. "சுற்றுமுற்றுமாயினனவன் பகர்ந்தசொற்கள்"

என்னும் வசனங்களாற் பிரகாசப்படுத்தி யிருக்கின்றனர்? இவ்வுண்மைக்கு விரோதமாக "தவமுதல்வர்சம்பந்தர்" என்பதற்கு நமது கூடற்கவிராயர் "முதன்மையான தவப்பேற்றினையுடையவராகிய பிள்ளையார்" என வுரையெழுதியதும அசம்பாவிதமாயதெனவறிக. இனித் தவமுதல்வரென்பது குலமுதல்வரென்புழியுண்டாம் பொருளிலேயே பரிவலாகமுறும. அன்றியும், "அகரமுதலவெழுத்தெல்லாம்" என்பதனோடியைந்து மணம்பெறுமென்க. எழுத்துக்களை யியக்கும் அகரத்தைப்போலத் தவத்தை யுயிர்களுக்கியக்குந் தலைவரென வதற்குப்பொருள்கூறுதலே தகுதியுடைத்து. அகரம் தான் பயன்வேண்டாது எழுத்துக்களுக்குப் பயன்விளைத்துத் தான் முதலாய்நிற்றல்போல வெமதுபிள்ளையார் தமக்கெனவோர்தவம்வேண்டாது உயிர்களுக்குத் தவத்தை யுயிர்க்குயிராயிருந் தியங்கப்பண்ணிப் பயன்விளைத்து முதல்வராய் விளங்குவரென்பது வெளிப்படை. இவ்வுண்மையோதரவேய

ன்றோ "தவம்பெருக்குஞ்சண்பையிலே தாவில்சராசரங்களெல்லாஞ்-சிவம்பெருக்கும்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார்" என வருஞ் மொழித்தேவ ரருளிச்செய்து உபசாந்தவாழ்வெய்தினர்? பூர்வமும் பின்னும் பிள்ளையார் தவப்பாட்டினையெய்திய சதுரரென்றிவரோதிய திவ்வாறொருதுங்கலா லினி யவரதுண்மை கண்டுரைசெய்தா ருரையுஞ் சிலவீண்டுவரைகிற்பாம.

ஒழிவிலொடுக்கச்சிறப்புபபாயிரத்துரை.

இதில்,

1. "ஓதியுணர்ந்த வவ்வாசாரியர்க்கெல்லா மவரவரறிவின்க ணருளுருவாய்நின்றறிவித்து மாசாரியவுருவாய் வெளிநின்றநுக்கிரகித்து நின்றனர்"

2. "பிள்ளையா ரிவ்வவதாரத்தின மேனி[illegible]ரவவதாரத்திலுங் குமார சற்குருவா யரஞர்க்குமகத்திய[illegible]க்கு முபதேசித்தருளிய வாசாரியத்தலைமையையுங் குறித்தது"

3, "இதனை யுடையபிள்ளையாருந் தமதுகடவுட்டன்மை வேறுபடாது தப்புருடவடிவங்கொண்டுநின்ற தம்மை யன்பானுள்ளுன்றி நோக்கினார்க்குக் குமாரசற்குருவென்னும் பெயர்கொண்டளவிகந்த சூரியருதயம்போன்றொளிவீசுந் தம்முன்னுருவாய தெய்வத்திருவுருவுட்கொண்டு விளங்கக்காட்டி நின்றனா"

4. "தலையில்வைத்து என்னுது தலைமேல்வைத்து என்றமையான் மறைமுடிக்கண்ணே வயங்காநின்ற வச்செல்வத்திருவடியின சீர்மை தோன்றிற்று"

என்னும் வாக்கியங்கள் கொள்ளக்கிடக்கின்றன. இவற்றைநோக்கினோர் "முதன்மையான தவப்பேற்றினையுடைய பிள்ளையார்" என்று பூர்வபட்சிபாரெழுதிய புத்துரையை வெற்றுரையாக விலக்குதலேயன்றிச் சத்துரையாகத் தாங்காரென்க. இதுநிற்க.

இவர் "தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரங்கிலையில்" என்பதில் "தவமுதல்வர்" என்பதற்குக் கூறியபொருள் தடுமாறிப்போன சங்கதியை மேலே தெரிவித்தாமன்றோ? இனித் "தாமுணர்ந்தாரங்கிலையில்" என்பதிலிவர் கைவைக்காட்டியதையும் கொஞ்ச மெடுத்திசைப்பாம். இதில், "அங்கிலையில்" என்பதற்கு "ஞானபோனச மூட்டியருளிய வம்மையுடனே சிவ

பெருமானைத் தரிசித்த வந்நிலையிலே" என வோரிடத்திலும், "ஞானபோனக முண்ட வந்நிலையில்" என மற்றோரிடத்திலும் பொருள் விரித்தனர். இரண்டில எது மெய்யுரை? எது பொய்யுரை? அன்றியு மிதற்கிவர் பதசார மெழுதியதில் "இவ்வகை ஞானங்களை யிடையீடின்றிப் பெறுதலின் அந்நிலையிலேயே யெனவும்" எனவோரிடத்திலும், "ஞானபோனகமுண்ட வந்நிலையிலென்றமையால் ஏகாயஞானத்தை யுணரப்பெற்றமையும்" என மற்றோரிடத்திலும் பிரசங்கித்திருக்கின்றனர். ஈண்டிவர்கூறிய அநேகஞானங்கள் மெய்யா? அல்லது ஒருஞானமே மெய்யா? "அந்நிலையில்" என்பது காலத்தைக் காட்டுவதன்றி யானமே ஞானப்பிரசங்கைக் கிடந்தராதாகையாலாண்டிவர்கூறிய இரண்டுவிதஞானமு மமையாவென்பதே நிச்சயம். இதுநிற்க.

இவர், கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டைகளில முதலிரண்டுஞானங்களைப் பிள்ளையாருக்குப் பூர்வஜந்மார்ஜிதபலமாகக்கூறியதனால் எஞ்சிய தெளிதல்-நிட்டைகளே பின்ஜந்மத்தி லவருக்கு ஆர்ஜனமாகத் தக்கவாம். இதற்கு விரோதமாக விவர் கலைஞானமென்பதொன்று தெளிதனிட்டைகளுக்கிடையிற் கண்டுகூறினார். பின்னரிவரே இது யாதெனவாசங்கித்துப் பிள்ளையார் "முற்பிறப்பிலே கலைஞானத்தின் கன்மகாண்ட உபாசனகாண்டங்களை முற்றமுணர்ந்து ஞானகாண்டத்திற் கேட்டலுஞ் சிந்தித்தலு நிரம்பி" னாராகையால், "சிவபெருமான் முன்னின்று முற்குறையாகிய தெளிதலையு மெய்ஞ்ஞானத்தையு மவர்க்குணர்த்து மிடத்து, அவரறிவின்கண் கலைஞானந் தானேயிடையில் விரிந்தது" என்றார். இதற்கு "சூரியன் பக்குவமாகிய தாமரைநாளரும்புகளை மலர்த்துமிடத்து முன்னுளவர்த்தப்பட்டிரவிற்குவிந்திருந்தமலர்களவற்றினிடையே தாமேவிரியுமாறுபோல" என வோருபமானமு மெடுத்திசைத்தார். இனியிவற்றினுபாசத்தை முறையே களைந்தெறிவாம்.

இவர், தெளிதல்-நிட்டைகளுக்கிடையிற் கொள்ளற்பாலதெனவுரைத்த கலைஞானத்துள், கன்மகாண்ட உபாசனகாண்டங்க ளந்தர்க்கதமென்று மேலேகூறியிருக்கின்றார்.

அன்றியும் ஞானகாண்டத்துள், கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல்-நிட்டைகளந்தர்க்கதமென்றும் நவின்றிருக்கின்றார். அதனால் ஞானகாண்டத்தையும், அதிலந்தர்க்கதமாகிய கேட்டல் முதலியவைகளையுங் கலைஞானத்தினின்றும் பிரித்தோத இவரான்முடியாது. இவரது கருத்தின்படிக் கலைஞானமென்றபோதே எல்லாஞானமு மதிற் கொள்ளக் கிடக்கின்றன. இங்ஙனமாக, இவர் "சிவனடியே" என்னும் பாடலில் தெளிதன்ஞானம், அநுபூதிஞானம் என்பவற்றிற்குவேறாகக் கலைஞானமொன்றுளதென விசைத்தமையாதோ அறிகிலம். கலைஞானத்துக்கும், ஏனையஞானங்களுக்கும் பேதந்தெரிந்து பேசவறியாத விவர்தாமு மொருசித்தாந்தப்பிரவர்த்தகராயினாரன்றோ? ஈண்டிவரது பிரசங்கம் தலைதடுமாறியமுறைமையா லிவர்தேடியவுபமானமும் நிஷ்பலமாயினதறிக.

அன்றியுமவ்வுபமானம் அவரது சித்தாந்தத்தையேற்றினும் பிரயோஜனகாரியாகமாட்டாது. எங்ஙனமெனின், தாமரையானது சூரியனால் முத்தொழிற்படும். அவ்வாறு தொழிற்படுங்கால் இன்று அரும்பியது மறுநாள் மலர்ந்தும், அடுத்தநாளுலர்ந்தும் முதல்கெடுவதே நிதரிசனம். சொரூபங்கெடாமலென்றுமொருபடித்தாய்விளங்குஞானப்பிரசாரஸந்தர்ப்பத்திலெங்ஙனே யிவ்வுபமானம் பயன்படும்? முன்னாளலர்த்தப்பட்டிரவிற்கூம்பியமலர்கள் பின்னர்த் தாமேவிரியுமென்றதும் அஸங்கதமாம். தாமரை முதனாள்மலர்ந்ததும், மறுநாள் விரிந்ததுஞ்சூரியனாலேயேயாகையால், இடையில தானேவிரிந்தது என்றது பொய்யாம். அது முதனாள் விரிந்ததிற்க, இரண்டாவதுநாள் விரிந்ததென்பது அதனழிவுபாட்டுக்கு ஆரம்பகாணங் கண்டுகூறியபடியாம். அதவா அது இடையில் விரியினும் விரிந்திடுக, உபமேயமாக வெடுத்துக்கொண்ட தெளிதல் நிட்டைகளுக்கிடையில்விரிந்த கலைஞானத்துக்கு அதுபொருந்தாது. ஏனெனின், கலைஞானம் முன்னாளலர்த்தப்பட்டுக் கூம்பியிருந்த மலர்போல்வது. இக்கலைஞானம் தெளிதன்ஞானத்துக்குப்பின்னும், அநுபூதிஞானத்துக்குமுன்னும் விரிந்தவாறென்னை? முன்னாளலர்ந்து அன்றிரவிற்கூம்பியமலர் மீண்

மேலருங்காற் பின்னுளவருமலரின்முன்னுயினு மல்லதுடனு யினு மலருமேயன்றி அப்பின்னுண்மலர்ந்திடுமேலதின் பின்னர் மலர்ந்திடுமெனல கூடாது. அவ்வாறுமலர்ந்தவிடத்து மஃ தொரோகாலத்தின் மலர்ந்த விரண்டுமலர்களி லொன்றற்குப் பின்னும், மற்றொன்றற்குமுன்னு மலர்ந்ததெனல் யாங்ங னம்? இந்தவியவஸ்தையா விவரெடுத்துக் கொண்ட(கூம்பிய தாமரைமீண்டுமவிரியும்) உபமானம் இவரதுபமேயத்தைச் சாதிக்கும் வலியிழந்தழிந்ததெனவறிக.

இவரிவ்வளவிலமையாமல் தெளிதன்ஞானத்தை யிரண்டாகப் பிரித்தார். இவ்வாறிவர் பிரித்துப் பிரசங்கிக்கற் காதாரமாய்நின்ற பிரமாணம்யாது? இவர்பிரித்தவாறு கொள்ளின், ஞானம் ஐந்தென்னும் பிரசங்கமேயன்றோ நிகழும்? ஞானவேள்வியைந்து, ஞானம்நான்கு என்றுணர்த்துஞ் சித்தியாருக்குமுன்ன ரிவரது சீரிழந்தபிரசங்கம் எங்ஙனேமணம் பெறும்? இனியிவர் தெளித விரண்டுவிதமென்றதுபோல வீனேய்கேட்டல் - சிந்தித்தல் முதலியவைகளுக்குந் தனித்தனிப் பிரிவுகள் கண்டுகூறுவது மாவசியகமாம். அப்படிக் கூறவருங்கால், நூல்வரம்பையழிக்கு மஸம்பாவிதஞானங்களெண்ணிலவந்திடையினுழையும். அப்போததற்கு ஞானப்பிரசங்கமென்னும் பேரழிந்து அஞ்ஞானப்பிரசங்கமென்னு மபிதானமே சிறக்கும். இவர் நேர்வழியைவிட்டு நிலைதப்பியபடியினாலன்றோ வெண்ணியவெண்ணியாங்கிசைத் திடர்ப்படலுறுகின்றார்! அந்தோபாவம்! பாவம்!! சேக்கிழார் பாடலுக்குரை செய்யப்புகுந்த விவர் முதல் நான்குஞானங்களை யங்கீகரித்துக்கொண்டார். அவற்றுள், முதலிரண்டுஞானங்களை யச்செய்யுளி லமையாவென்றார். மூன்றாவதாகிய தெளிதன் ஞானத்தை யிரண்டாகவுடைத்து அச்செய்யுளின் முதலிரண்டடிகளுக்கு முறையே யொப்படைத்தார். இனி யெஞ்சிய நிட்டைஞானத்தை அநுபூதிஞானமென் றங்கீகரித்தார். இவரது கருத்துக்கலங்குமாறு கலைஞானமொன் றதிகங்காணப்பட்டதை முன்னரச்செய்யுளி லமையாவென்று தள்ளிய கேட்டல் சிந்தித்தல்களென்று பின்னர் இளக்கவிழைந்தார்.

இவர் (பிள்ளையார் முன்ஜன்மத்தி லார்ஜித்தஞானத்தை) வருவித்துக் கூறுவதனாலும், அல்லது அவ்வவதாரத்திலடைந்த ஞானத்தை(யாம்கூறுவதுபோற்) கூறுவதானாலும் அச்செய்யுளில் கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல்-நிட்டைகளே பெறப்படலாலெமது சித்தாந்தத்திற்றனே யிவரதுபிரசங்கம் வியாப்பியமா யடங்கியதெனவறிக.

இனி யாம் அச்செய்யுளின் முதலடியில் சிந்தித்தன்ஞானமும், இரண்டாவதடியில் தெளிதன்ஞானமும், மூன்றாவதடியிற் கேட்டல் - நிட்டைஞானங்களும் பெறப்படுவனவாக நிறுவியுள்ளேம். இவற்றுள், மூன்றாவதடியிற்போந்தகலைஞானத்தைக் கேட்டன்ஞானமென்றது கூடாதெனவும், கேட்டன்ஞானமென்றது ஞானகாண்டப் பிரசங்கத்தின்மாத்திரமே பயன்படுமெனவும், அக்கலைஞானம் கன்மகாண்ட உபாசனாகாண்ட ஞானகாண்டங்களின் வடிவமாயிருப்பதெனவுமிவர் பிரசங்கித்து எம்மை மறுக்கலாயினர். இவரெம்மை மறுப்பதன்முன்னர் அக்கேட்டலோடு சிந்தித்தலையுஞ் சேர்த்துக் கலைஞானமென்று இவர்கழறிய தென்னமதியோ? இவருக்குக் கலைஞானமென்றமாத்திரத்தானே கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல - நிட்டைகள் பொருளாய் நிற்கவும், இவரேனோ கேட்டல் சிந்தித்தல்களைமாத்திர மதற்கொப்படைத்து, ஏனைய தெளிதல்-நிட்டைகளை யதினின்றும் விஜாதிஞானங்களாக வேறுபடுத்த விசைந்தார்? இனியிவர் கலைஞானமென்றதற்குக் கொண்டபொருளே தவறு. என்னெனின், கலைஞானத்திற் கன்மகாண்ட - உபாசனாகாண்ட-ஞானகாண்டங்களும், ஞானகாண்டத்திற் கேட்டல - சிந்தித்தல் - தெளிதல்-நிட்டைகளு மிவரொப்பி யிருக்கின்றாரன்றே? அதனாலிவருக்குக் கேட்டல் = ஞானநூலைக்கேட்டலும், சிந்தித்தல் = ஞானநூலைச்சிந்தித்தலும், தெளிதல் = ஞானநூலைத்தெளிதலும், நிட்டை = ஞானநூலை யநுபவித்தலுமென்று கூறுவதாகியபொருளே யொப்பமுடிந்திருக்கின்றது. இது சர்வாசங்கதமாம். இவரிவ்வழியிலுமில்லாமல் கேட்டல்-சிந்தித்தல்கள் கலைஞானத்திலடங்கியன வெனவும், இவற்றின்வேறாயு

ள்ளவை தெளிதல் - நிட்டைகளெனவுங் கூறினாராகையால் இவருக்குச் சப்தங்களேயன்றி அவற்றினர்த்தங்கடெரியாமலாற்றி யலைகின்றாரென்று யாம்பிரஸ்தாபிப்பதிற் குற்றமில்லை. இனி பிந்தஸாதர்ப்பத்தில், யாம் எமது ஆசாரிய பிரபாவத்தில் "வேத முதலிய கலைகளிலொருவன் பயின்றுவருங்கால் அவற்றாற்பெறப்படு முண்மை அவனது பரிபாகத்துக்கேற்பத் தேகான்மவாதமுதல் சைவசித்தாந்த மீறாயுள்ள முடிவுகள் யாதாயினுமொன்றிற்பரிவஸாந முறலால், பொதுவாயினை கலைஞானமென்று முதன்ஞானத்தைக் கூறினார். அங்ஙனம் பயின்றவருகையி லவற்றுட் டெளியவடித்தெடுக்கும்பொருள் சிவமொன்றேயாகையாலும், அதைச் சிந்திப்பதே யவற்றின் றுணிபொருளாகையாலும் இரண்டாவது சிந்தனநிலையைச் சிவஞானமென்று கூறினர். அங்ஙனஞ்சிந்திக்குங்கால் பாவனையாதிகளிலொழிந்து சிவம் வேறு தான்வேறாகாமலத்துவிதப்பட்டுநிற்குநிலையைக் கடைப்பிடித்துணர்த்து மவசரத்தையே பாங்கினிலோங்கியஞானம் என்று கூறினர். அங்ஙனமிரண்டறக் கலந்து சிவத்தோடுபிரிபடாது சிவபோகத்தி லிடையீடுபட்டுக்கிடத்தலின்மேலிட்ட வநுபவம வேறுகேட்கப்படாமையால் அந்தமுடிந்த வநுபூதியையே மெய்ஞ்ஞானமென்று கூறினர். கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டை என யாம்காட்டிய அவசரங்களை அத்திருவாக்கிற்போந்த சொல்லடிகளைக்கொண்டே அறிவிப்பாம். கேட்கப்படுந்தன்மையாலன்றோ சுருதி என்னும்பேரை வேதம்பெற்றது? அதுவே கலைஞானமென்பது சர்வசித்தம். இதனால் அங்கேபோந்த கலைஞானம் அமைவுபெற்றது. சிந்திக்குஞானம் இரண்டாவதென்பது 'சிவனடியேசிந்திக்கும்" என்று சூசிப்பித்தலால் விளங்கும். தன்னில்வேறாகாம லநந்யமாய்ச் சிவம்பிரகாசிக்குந்தன்மையையே "பாங்கினிலோங்கிய" வென்னுஞ்சொற்கள் வெளியாக்கின. நிட்டையை மெய்ஞ்ஞானமென்றது நிராக்ஷேபம். ஆயினந்ஞானங்களை முறையேவைத்துக்கூறாமல் மாற்றிக்கூறிய தென்னையெனின், அதனைவிளக்குவாம். இந்த ஞானங்களுக்குவிஷயமாகுஞ் சிவமாகியஞேயப்பொருள் மநநமாகிய இரண்டாவது ஞானத்திலேதானே வெளிப்படலால் அதனை முன்வைத்துக்கூறினார். ஞேயமாகிய சிவம் அநந்யமாய்த்தோன்றுமிடமாகிய ஞாதுருவைவிளக்கலால் "பாங்கினிலோங்கிய" என்று நிதித்யாஸநத்தை அதன்பின்னேவைத்தருளினார். ஞாதாவாகிய தன்பக்கனிகழு ஞேயமாகியசிவத்தை ஞானத்தாலன்றியறியக்கூடாமையா லந்தஞானபீடமாகிய சிரவணத்தை அதன்பின்னே யமைத்தருளினார். இவை திரிபுடியாகவிளங்கலால் திரிபுடி

யதீதத்தைக்காட்டுவதெனச் சமாதியை முடிவாகச்சாதித்தருளினார். அன்றியும், நம்பேரருளாளரந்தஞானங்களை ஸாதனவழியிலொன்றன்பின்னொன்றாகவெய்தாமலோரவஸரத்திற்றானே யெய்தினமொன்னுஞ் சுதந்தரத்தைக்காட்ட அவைகளை மாற்றிக்கூறினாரொன்பதுமொன்று" என்று பிரசங்கித்திருப்பதை விவேகிகள்கவனிப்பது ஆவசியகமாம்.

இதிற்பெறப்பட்ட நான்குஞானங்களில், முன்னையவிரண்டு ஞானங்களுக்கு நூல்வேண்டப்பட்டமையும், பின்னையவிரண்டுஞானங்களுக்கு நூல்வேண்டப்படாமையும் வியக்தமாகியது. முதலில் நூலைக்கேட்டலும், பின்னரந்நூலாற்றுணியப்பட்ட மெய்ப்பொருள் சிவமெனக்கேட்டவாறு சிந்தித்தலும், பின்னர்ச் சிவம் தன்னில்வேறாகாமலேகமாய்விளங்குமுண்மையைத் தெளிதலும், அநந்தரம் யாமதெளிந்தோமென்பதுமொழிந்து சிவபூரணத்திலத்துவிதப்பட்டு நிட்டையாகிய சுவாநுபூதியினிற்றலுமாகிய நிலைகளே யீண்டுக்கேட்கப்பட்டமையாலும், சித்தியார் சுபட்சவுரையில் "ஞானநூலையோதல்" என்னுஞ்செய்யுளுரையில் "தெளிதற்கும் நிட்டைக்கும் நூல்வேண்டப்படாமையின் நூலானாகற்பாலனவாய *ஏனையைந்துமே ஈண்டு வேள்வியென்றெடுத்துக் கொள்ளப்பட்டன" என்று சிவஞானயோகிகள் கூறுமாற்றானும் பூர்வபட்சியார் தெளிதல்-நிட்டைகளையுங் கலைஞானமென்று கொண்டதிரிபுணர்ச்சி அஸாமஞ்சஸமாயிற்று. இவரித்தெளிதனிட்டைகளைக் கலைஞானத்தில் வேறுபிரித்துமோதினாரன்றே வெனின், இவர் வேறுபிரித்தமை தெய்வத்துக்கே வெளிச்சம். இவற்றின்பாகுபாடறிந்தே யிவரோதினவராயி னொன்றோடொன்றுமுரணுமாறு இரண்டிடங்களி லிரண்டுவிதமாகச்சொல்லார். அன்றியுமத்தெளிதனிட்டைகளைப் பொருந்தாத விடங்களிலெல்லாம் பொருத்த விசையமாட்டார். இவருக்கு"சிவனடியேசிந்திக்கும்" என்னும் விசேடணத்தை முத

*ஏனையைந்துமென்றது=ஞானநூலினையோதல், அதனையோதுவித்தல், அதன்பொருளைக்கேட்பித்தல், கேட்டல், அதனைச்சிந்தித்தல் என்பனவாம்.

விற்பெற்றுவந்த வோர்ஞானம் தெளிதன்ஞானமாயவாறு எப்படியோ அறியேம். சிந்திக்கும் என்னுஞ்சொல்லுக்கு இவர் தெளிதல் என்று பொருள்கொண்டது இவர்போன்ற படிப்பாளிகளே சந்தோஷிக்கத்தக்கது. இவர் நியாயமும் பிரமாணமுங் கருதாதுரைப்பனவெல்லா மிவருக்குமாத்திரமே பிரயோஜனமாகத்தக்கனவென்றறிக. இவரது கில்லைமை யிவ்வளவினதாயிருப்பதுணராமல கேள்ஞானத்தைக் கேட்டன் ஞானமென்று யாம்கொண்டது பிசகென வொன்று கூறினார். இவர் எம்மேலேற்றியபிசகு இவர்மேலுமேறியிருப்பதை முன்னமெடுத்துக் காட்டியுள்ளேமாயினும், அவர் வினவியதே பிசகென விண்டு நிரூபிப்பாம். கேள்ஞானம் என்பதற்கு வேதமுதலிய கேள்விகளென்று யாம்பொருள்கூறினும். அவ்வேதமாகியகேள்வி சுரோத்திரத்திற்கு விஷயமாதல் கருதியே அதனைச் சுருதியென்று மேலோர்கொண்டனர். சுருதி என்னும் பேரே வேதத்தைக் கேட்டன்ஞானமென்று கூறுதற்குறுதியபயத்தலி னிஃதுணராம லிவருரைப்பனவெல்லாம் பெரியாரவைக்கட் பேணற்பாலனவல்லவென்றுணர்க. இதனை முன்பே ஆசாரியபிரபாவத்தில் யாம்விதந்துள்ளேம். இனியிவர் கேட்டன்ஞானமென்றது ஞானகாண்டப்பிரசங்கத்தின் மாத்திரமே பயன்படத்தக்கதெனவும், அதனால் அந்த ஞானகாண்டத்துடன் கன்மகாண்ட உபாசனகாண்டங்களையு முணர்ந்த பிள்ளையாரிடம் அது பிரயோசனப்படுமாறெங்ஙனமெனவுங் கடாயினாராகையா லதற்கும் இறைதந்தொழிப்பாம். பிள்ளையார் கன்மகாண்ட உபாசனகாண்டங்களையெல்லா முணர்ந்திடினு மவை ஞானகாண்டத்திலடங்கி வியாப்பியப்படுதலின் வியாபகமாய்நின்ற ஞானகாண்டத்தையே சேக்கிழாரெடுத்தோதினாரென்க. இதனை முன்புமெடுத்திசைத்திருக்கின்றோம். வேதத்திற் சதுர்விதபுருஷார்த்தங்கள் கேட்கப்படினுந் தருமம் - அருத்தம் - காமம் என்னு மூன்றும் பூர்வபட்சமும், வீடொன்றே சித்தாந்தமு மாயிருத்தல்போல வேதம் அல்லது கேள்ஞானத்திற் காண்டத்திரயங்கள் பெறப்படினுங் கன்மகாண்டம் - உபாசனகாண்டம் என்னுமிரண்டும் பூர்வபட்ச

றும், ஞானகாண்டமொன்றே சித்தாந்தமுமாம். புருஷார்த்தத்தை நாம்கூறுங்கால் வீடொன்றே நிலைபேறாயிடுதல்போலக் கலைஞானத்தை நாம்கூறுங்கால் ஞானகாண்டமொன்றே நிலைபேறாயினதறிக. இந்த ஞானகாண்டத்தையே சேக்கிழார் கூறியதற்கிணங்க யாமுங் கேட்டன்ஞானமென்று கூறிமுடித்தாம். இந்த ஞானகாண்டத்துள், இதனைப் பிரதிபாதிக்குங் கலைஞானம கேட்டல் - சிந்தித்தல்களையே புரோவாதாநுவாதங்களாகப் பிரகாசப்படுத்துமன்றி யேனைய தெளிதல் - நிட்டைகளை யுடன்கொண்டிராதது மநுபவவேத்யமாகமென வறிக.

இன்னுமிதனை யுபமானமுகத்தா லினிது பிரகாசப்படுத்துவாம். ஒருவன "கல்வியிற்பெரியவன்கம்பன்" என்று புகழ்ந்ததாகக் கொள்வோம். அதனை நாமவிரிக்குங்கால அக்கம்பன் இராமாயணம் பாடியது முதலிய பிரஸ்தாபங்களையெடுத்தோதுவதொழிந்து அவனுக்கு நெடுங்கணக்குவரும், எண்சுவடி வரும், நிகண்டுவரும், நன்னூல்வரும் என்று பிரசங்கித்துக் காலப்போக்குச்செய்தல் கூடுமோ? இவற்றையெடுத்து விரித்தோதாமையா லவனுக்கிவை தெரியாவென்று யாரேனுங்கொண்டு குறைபடுவரோ? இதனையுய்த்துணர்வார் ஞானகாண்டத்தையே புணர்ந்தார் பிள்ளையாரென்று சேக்கிழார்கூறியவிடத்தும, யாமதனைவிரித்தோதியவிடத்தும அப்பிள்ளையாருக்குக் கன்மகாண்ட உபாசனாகாண்டங்களை வருவித்துரையாதது குற்றமென்றாவது, அவருக்குக் கன்மகாண்ட உபாசனாகாண்ட தருமங்கள் தெரியாவெனவாவதுகூறிப் பரிபவமெய்தாரென்க. இதுகாறும் யாமதெளிவித்த நியாயங்களால் ஞானகாண்டமொன்றற்கே கேட்டன்ஞானமென்னும் பெயர் கூடுமெனவும், ஏனைய கன்மகாண்ட உபாசனாகாண்டங்களுக்கு அது கூடாதெனவு மிவர்பிரசங்கித்தது நிஷ்பலமாயிற்று. இனிக் கன்மகாண்ட முதலியன கேட்டல் என்னும் பெயரைப்பெறாதாயின், அற்பசுருதியென்பது யாது? கன்மகாண்டமுதலியன அற்பசுருதியாயினமை கொண்டேயன்றோ ஞா

னகாண்டத்தைப் பிரபலசுருதி யென்று வழங்குகின்றனர் பெரியோர்? கன்மகாண்ட உபாசனகாண்டங்களும், ஞானகாண்டமுமாகிய கலைஞானமடங்கலுமேயன்றோ சுருதியென்னுமபோபெற்றுக் கேட்டன்ஞானமாகச் சிறந்திருக்கின்றன? அன்றியும், கதாசிரவணம - புராணசிரவணம - வேதாந்தசிரவணம் - சித்தாந்தசிரவணமுதலிய பிரயோகங்களாலுங் கலைஞானமடங்கலுக்குங் கேட்டன்ஞானமென்னும் பெயர் கேட்கப்பட்டமை சித்தாந்தமாயிற்று. இவற்றுட்சிறப்பாக ஞானகாண்டத்துட்போந்த சிரவணத்தையே கேட்டலென்று நிர்விவாதநிலையில் யாம்சிறுத்தியதும் நிலைபேறாயிற்று. இவ்வுண்மை யுணர்ந்தவர்கள் நமது மதுரைப்புலவரதுஞானத்தை மணமிழுந்தஞானமென்றே மதித்தொதுக்குவரென்க. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இவரிம்மட்டிலமையாமல் "பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம்" என்பதைத் தெளிதன்ஞானமென்று யாம் பிரஸ்தாபித்தது சொன்னிலையாற் பெறப்படவில்லையெனவும், யாம்கூறியஞானங்கள் பிள்ளையாருக்கு நிகழ்ந்த ஞானப்பேற்றின் முறைமையோடு மாறுபடுகின்றனவெனவுங் கூறினர். அன்றியும், யாம் சிந்தித்தல்-தெளிதல்-கேட்டல்-நிட்டை என்று கொண்டவமைதி முறைபிறழக்கூறிய குற்றத்தின்பாற்படுமெனவும் பிரசங்கித்தார்கின்றார். எமது ஆசாரிய பிரபாவம் படிததவர்க் கிவ்வாசங்கைகள் வெகுதுச்சமெனக. "பாங்கினி லோங்கிய" என்பதற்கு "ஞாதாவெனியதன்னிடத்தில் ஞேயமாகியசிவம் அநந்யமாயோங்கிய" என்று யாம் பொருள்கூறியதைக்காட்டிலு மிவர் சொன்னிலையாற்றெளித்துக்காட்டும் பொருள் யாதோ? பாங்கு என்பது பக்கல் என்றபொருள்படலால், பாங்கினில் என்பதற்குத் தன்பக்கலில், அல்லது தன்னிடத்தில என்று யாம் பொருள்கொண்டாம். ஆன்மாவாகிய தன்னிடத்திற் சிவம் பிரகாசிக்கக்காண்டலே தெளிதன்ஞானமாம். இதுவே சரதமென்பதைச் சிவஞானயோகிகள் சித்தியார் பொழிப்புரையில " சிந்தித்ததனைத் தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான் மாசறத்தெளிந்து மறியலாம்"

என்று விளக்கியதனானுந் தெளியலாமென்க. இத்தெளிதல் ஞானத்தினுண்மையினைச் சொன்னிலையால் யாம்விளக்கிய திவருக்கு விபரீதமாகத் தோன்றியது அதிசயமன்று. ஏனெனின், இவர் "அங்ஙனம் பிள்ளையாருக்கு நிகழ்ந்து சிந்திக்குஞ்சிந்தனையைச் சிவனடியே சிந்திக்குமெனவும்" என்றுகூறிவிட்டு, இதனைச் சொன்னிலையாலமைந்த தெளிதன்ஞானமென்று பிரசங்கித்தவராகையா லிவர்தேடிய வமைதியோடொவ்வாததெல்லா மிவருக்கு விரஸமாவது ஸஹஜந்தான். சிந்தித்தலைத் தெளிதலென்று பிரசங்கித்து இவர் விரோதித்ததுணராமலதனை மேயமேலேற்றியது கல்விமணமறியாதார் கழகத்தின் மாத்திரமே கனம்பெறுமென்க.

இனியிவர் யாம்கூறியஞானங்கள் பிள்ளையாருக்கு நிகழ்ந்த ஞானபேற்றின் முறைமையோடு மாறுபடுகின்றனவெனவொன்று கூறினாரன்றோ? இதுகாறும் யாம் விளக்கிக்காட்டிவந்த நியாயங்களால் பிள்ளையாரது ஞானப்பேற்றின்முறைமையோ டிவரதவாந்தரப்பிரசங்கமே விரோதித்தவலப்பட்டதென வுணர்ந்து விவேகிகள் வெறுத்திடுவரென்க. "அரங்கின்றி வட்டாடலற்றே நிரம்பிய - நூலின்றிக் கோட்டிகொளல்" என்னுங் குறளுக்கிவ ரிலக்காகி நூல்வரம்பினிற்றலொழிந்து பிள்ளையாரிடங்கற்பித்த ஞானப்பேற்றின்முறைமை கேவலம் அலங்காத்மவாதமாயினதெனமேல யமைவுடைத்து.

இன்னுமிவர் கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டை[illegible] முறைபிறழக் கூறப்படுதலடாதெனவொன்று பிரசங்கித்துள்ளாராகையா லதனையும் பரிஷ்கரித்திடுவாம். "சுவையொளியூறோசை நாற்றமென்றைந்தின் - வகைதெரிவான்கட்டேயுலகு" என்னுங்குறளில் சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்கள் முறைபிறழ வமைக்கப்பட்டிருத்தற்கு இவரினி யென்செய்வார்? இப்படியே திரிகடுகம்-திருவள்ளுவமாலை முதலியநூல்களிலும்முறைமாற்றங்கள் பலவுள. இனி யிவரிந்நூல்களையுங் குறைகூறித் தலைதடுமாறுவார்போலும். முறைமாற்றத்தைப் பிழையென்றுகருதி முன்வெளிப்பட்டார்க்கெல்லா மவ்வ

ப்போதே யாம் விடையளிப்பித்து முடிவுசெய்திவருணரார்போன்று மீண்டுமதனை யெடுத்தெமக்குப் பூச்சிகாட்டியது சர்வாசங்கதமென்க. இதுநிற்க.

இவரதாபாசத்திரட்டில் சிவஞானபோதம் பாசவிடுதியைக்கூறும பத்தாஞ்சூத்திரத்திலுள்ள "இறைபணிநிற்க" என்னும்பகுதியை மேற்கொண்டு அது பணிநிற்குஞானமாமெனவும், அதனையே "பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கிய ஞானம்" என்று சேக்கிழார் கூறினரெனவு மிவர் பிரசங்கித்திருக்கின்றார். இதுவுமஸங்கதமேயாம். எங்ஙனமெனின், சித்தியாரில "ஞானயோகக் கிரியை சரியை நாலு நாதன்றன்பணி ஞானி நாலினுக்குமுரியன்" என்று கூறப்பட்டிருக்கின்றது. இதில், இறைபணி அல்லது நாதன்றன்பணி யென்பது ஞானமும்-யோகமும - கிரியையும் - சரியையும் ஆகுமென்று துணியப்படுகின்றது. இங்ஙனமாக, இவரதனை ஞானமாத்திரமாகத் துணிந்தது எதனால்? இறைபணியிலடங்கிய ஞானத்தையே ஆண்டு யாமகூறியதெனின், ஞானத்தினோர்கூறு இறைபணியென முதற்கட்கூறியதனோடு இறைபணியினோர்கூறு ஞானமென்னுமிது விரோதப்பட்டழியுமென்க. இதனால், யாம்விடுத்த ஞானயோகக்கிரியாசாஸ்திர மிவரதிறைபணிஞானத்தைப் பெதிதொழித்ததெனலே யமைவுடைத்து. இவ்வுண்மையை யுணர்ந்திடாம லிறைபணிநிற்குஞானமென் றிவரிசைத்தபுதுமை சைவநூற்றெளிவிழந்த மருளினையே யிவருக்குச் சாதித்தது.

இவரிவ்வளவிலமையாம லிவரதுசுவடியின் ஆறாவது பக்கத்தில் ஊரிலுள்ளஞானங்களையெல்லாம்பிள்ளையாருக்கு ஊட்டியுபசரித்தார். ஞானம் என்னுஞ் சொல்வந்தமாத்திரத்தானே யாவுமிவருக்கு ஞானங்களாயிடின், அடாஞானம் *மிடாஞானம்-தடிஞானம் - போலிஞானம்-பொய்ஞ்ஞானம் விபரீதஞானம்-அஞ்ஞானம் என்னுஞானங்களு மிவர் தேடத்தக்க ஞானங்களாதற் கிழுக்கென்னோ கேட்டலாதிநான்கு

---

* கடஞானம்.

ஞானங்களையன்றி வேறுஞானங்களுஞ் சேக்கிழார்வாக்கிற் பெறப்பட்டனவென்று இவர்பிரசங்கித்தது அஸாமஞ்சஸமெ னவே யமைவுடைத்து. இனி ஞானப்பிரசமதை சிவஞான போதம எட்டாஞ்சூத்திரத்திற்றனே செய்யப்பட்டிருக்கின் றது. அவ்வெட்டாஞ்சூத்திரத்திற்குக் கருத்துரையெழுதிய உரையாசிரியரது வாக்கியங்களை ஈண்டெடுத்துக் காட்டுகின் றோம்.

சிவஞானபோதம

எட்டாஞ்சூத்திரக்கருத்துரை.

1. "ஆன்மாக்கள் ஞானத்தைப் பெற்றுணருமுறைமை கூறுகின் றது." பாண்டிப்பெருமாள்.

2. "இது ஞானத்தினை யுணருமுறைமை கூறுகின்றது." மற்றொரு உரையாசிரியர்.

3. "சிவஞானத்தினை யுணருமுறைமையினை யுணர்த்துதனுதலி ற்று." சிவஞானமுனிவர்.

இவற்றைத் தெளிந்து,இன்னோரிவ்வாறு கோடற்கியை புண்டாமாறு எல்லாச்சூத்திரங்கட்குங் கருத்துரைதெரித்த

அபியுக்தராவார

"மறைப்பினைநீக்கிஞான வாரியையினைத்தலெட்டே"

என்று கூறியதையு முய்த்துணர்வார அவ்வெட்டாஞ் சூத்திரத்தின்பாலனவாய கேட்டலாதி நான்குஞானங்களை யே ஆதரித்தின்புறுவதன்றிப் பத்தாஞ்சூத்திரத்தைத் தட விப்பார்த்துக்கொண்டு பரிபவமுறாரென்க. இதுநிற்க.

ஞானசதுஷ்டயநிருபணம்.

சிவஞானசித்தியார்

"கேட்டலுடன் சிந்தித்த றெளிதனிட்டை
கிளத்தலென வீரிரண்டாய் கிளக்கின்ஞானம்"

என்றுகூறுகின்றது.

சிவஞானதீபம்

"தெரிவரியஞானமுநாலாகுங்கேட்டல்
சிந்தித்தறெளிதலுயர்நிட்டையென்றே"

என்றுகூறுகின்றது.

## சித்தியார்பொழிப்புரையில்

### சிவஞானயோகிகள்

1. "மேற்கூறிய ஞானவேள்வியைத்தலுள் முன்னையமூன்றினும் ஆசிரிய னறிவுறுக்கு முண்மைஞானம் நிகழாமையின், உண்மைஞானமெனப்படுவன வினைக் கேட்டல் சிந்தித்தல்களும், சிந்தித்ததனைப்பின்னர்த் தெளிதலும், தெளிந்தவாறேயதன் பினிட்டைகூடுதலுமென்னு நான்கேயாம்."

2. "இறைவனியல்பு அப்பெற்றித்தாயினும், அவனை அவனிறைவனூலெனப்படும் வேதசாரமாகிய சிவாகமத்தி னனுபவமுடைய தேசிகரருளிச்செய்யும் உபதேசத்தாற் கேட்டறியலாம். கேட்டதனை அதற்கனுகூலமான வளவையாற் சிந்தித்துமறியலாம். சிந்தித்ததனைத் தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான மாசறத் தெளிந்துமறியலாம். அதனால் பாசக்ஷயம்பண்ணி நிட்டைகூடிச் சிவானந்தானுபூதியும் பெறலாம்."

என்றுகூறியருளினர்.

இவற்றால், உண்மைஞானமெனப்படுவன கேட்டல்-சிந்தித்தல் - தெளிதல் - நிட்டையென்னு நான்கே என்பது பசுமரத்தாணி யறைந்தாற்போல நாட்டப்பட்டது.

இதுகாறும் யாம் (விபவல்தையுண்டாமாறு) விளக்கிக் காட்டிய வுண்மையால், கேட்டல - சிந்தித்தல் - தெளிதல்-நிட்டைகளாகிய நான்கு ஞானங்களையே "சிவனடியே" எனனும் பாடலில் ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் அருளிச்செய்தாரென்று பிரகாசப்படுத்திய எமது "ஞானபேதவிளக்கம்" வேறுன்றிப் பொலிவெய்தியதுணர்க. அன்றியும், பூர்வபட்சியினது பானுவுக்குப் பரிபவமுண்டாயினவாறுமறிக. இன்னும் விரிக்கிற் பெருகும். இதுநிற்க.

இவர் இன்னுமொருபுதுமை கூறியிருக்கின்றார். அது "இத்தகைய திருவாவடுதுறை மகாசந்நிதானத்தின் பார்வைக்கனுப்புவித்துவந்ததின்பேரில், அந்த மகாசந்நிதானத்திற்கும் பின்னும் யானெழுதியவர்களுக்கும் இவ்வுரைப்பொருளே மேலுஞ்சிறந்து தெளிவுற

விளக்கும்'' என்றுதொடங்கி, அதனடியில் வீண்காலக்ஷேபஞ் செய்திருப்பதேயாம். இவரதுரை மகாசந்நிதானத்திற் கொருகால் அனுப்பப்பட்டிருந்தாலு மிருக்கலாம். அதுகொண்டே அது சிறந்திடமாட்டாது. அந்தமகாசந்நிதானத்தின் அங்கீகாரபத்திரமே முக்கியம் வேண்டற்பாலது. அஃதொன்றுமபெறாமல் அந்தமகாசந்நிதானத்திற்குப் பின்னுமயான கடிதமெழுதினேனென்று இவர்பெருமைபேசியது இவருக்குப பரிபவதனதயேயூட்டியதென்க. யாவரது அங்கீகாரத்தைப் பெறினும், பெறாவிடினும் நியாயமுகத்து நிலைபெறுவதொன்றே சர்வஸம்பிரதிபந்நமாகத்தக்கது. இவற்றை யினி நமதன்பர் சீர்தூக்கி உண்மைஞானமுணர்ந்து பரமபதியாகிய ஸ்ரீ ஜ்ஞானஸம்பந்தப் பெருமானது திவ்யப்பிரஸாதமெய்தி ஸுகிப்பாராக. சுபம்! சுபம்!! சுபம!!!

## வாழ்த்து.

''வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.''

## வேறு.

'' வாழ்க ஞானசம் பந்தன்ம லாக்கழல
வாழ்க காழிக ஞானங்கள் வணபொழில்
வாழ்க மாதுமை மாதவன் மாதவர்
வாழ்க நீற்றெழில் சைவமும் வாழ்கவே.''

## திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீஜ்ஞானஸம்பந்ததேசிகாயநம:

# *திருக்கண்ணப்பர்பிரபாவம்.

காப்பு.

"உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்
நிலவுலாவியநீர்மலிவேணியன்
அலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்."

நூல்.

பொன்மலிபுரிசடைப் புண்ணியற்கிட
மென்பதுகயிலையென் றிசைக்குமாமறை
அன்பினர்தொழுமது சேய்த்துநாமடைந்
தின்புறுகயிலைகா ளத்தியென்பவே. (௧)

காணுமுன்கயிலையைக் கயிலையுண்டெனப்
பேணுதலெவன்வெறும் வார்த்தையேபிழை
பூணுருக்காட்சிசேர் கயிலைபொங்கொளி
தோணுகாளத்தியே யென்பர்தொன்மையோர். (௨)

வேதநாலாவதா விளம்புமூர்த்திசேர்
நீதிலாத்தானமீ தென்றுசெப்பலான்
மீதுறுபரமிடமிது வன்றிமேலுமோர்
காதல்சேரிடமுள தெனனல்கைம்மையே. (௩)

எத்தலமிதற்குமே லியம்பினும்மவை
இத்தலந்தரியமா யிலகலாலிதன்
சத்தெனவேகொள லாகுஞ்சால்புடைத்
தத்துவமறிந்தபேர் சாற்றுமுண்மையே. (௪)

*இஃது ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரநாயகரவர்கள் செய்தது. இனி ஏனைநாயன்மாரது பிரபாவமும் ஒவ்வொன்றாக வெளியிடப்பட்டுவரும்.

சொன்னவிப்பதியிடைச் சூழ்ந்துமாதவ
முன்னிழைத்தவர்பலர் முதல்வற்போற்றியே
அன்னவர்தம்முளோ ரனபர்வேடுவ
ரென்னவந்துதித்தவர் திண்ணனென்பவே. (௫)

தத்தையார்தாயிடைத் தந்தைநாகனுக்
கித்தரைபுகழ்மக வெனவந்தோன்றினர்
சத்தசத்துணர்பெரி யோர்கள்சார்ந்துசாம்
சித்தரென்றினிதினேத் தெடுக்குஞ்செம்மலார். (௬)

முற்பவங்களிற்சிவ பூசைமுட்டுறு
தற்புதமுறவிழைத் தான்றமாதவம்
பொற்புறவெய்தலாற் போந்துகானிடை
யெற்படிவத்தாகா ளத்திமெய்தினர். (௭)

கற்றவமுந்தலா னுடியம்மருங்
குற்றமாமலையினை நோக்கியொண்பொருள்
பெற்றிடுவோமெனப் பெரிதுளங்கனிந்
தற்றமிலவ்வரை யேறலாயினார். (௮)

ஏறினர்வரைமிசை யெதிர்கண்டனர
வீறுமவ்வரைமுடி விளங்குஞ்சோதியை
மாறிலாவன்புரு வாயமாண்புடைப்
பேறெமக்காயினர் பெருமைபேசுவாம். (௯)

ஆயுமெய்யன்புரு வாகுந்திண்ணனார்
பாயுமால்விடைப்பரன பக்கமேவியிங்
காயவோர்துணையிலா தையநீயுருந்
தாய்கொலோவென்றழு தழுதுவீழ்ந்தனர். (௧௦)

எழுந்தனர்புல்லின ரீசன்மேனியைத்
தொழுந்தகையன்பினாற் சூழ்ந்துமோந்தனர்
அழுந்தியசிந்தையா ரரும்பிநீர்விழி
பொழிந்திடநின்றனர் புளகம்போர்த்தனர். (௧௧)

எந்தைநின்மேனியென் னிலைத்திருப்பதென்
றந்தமிலன்பர்தா மருகுநின்றுதஞ்
சுந்தரக்கைகொடு நீவிச்சோதியார்
தந்திருமேனியைத் தாழ்ந்துநின்றனர். (௧௨)

உண்பசிக்கிரங்கிவர் தூட்டுவாரிலை
யென்பதின்றறிந்தன னென்செய்வேனெனக்

இன்புடைமாமணி யேயெனக்கனைந்
தன்டர்தாமலையிழிந் தார்வனீடினார். (௧௩)

வேட்டைமுன்புரிந்தொரு பன்றிவீழ்ந்திடக்
காட்டகம்வைத்ததைக் காடன்காக்கவே
நாட்டிவந்தவரதை நாடிப்போயினார்
ஊட்டுதற்குமையிடத் தொருவனுண்ணவே. (௧௪)

வேறு.

கொன்றவிலங்கினைக்கூறு படத்துணித்துக்கொழுவியவைப்
பொன்றயங்குமூன்யாவும் பொருந்தவேலிடைக்கோத்து
மின்றயங்குநெருப்பிடைவைத் தெடுத்தவற்றைமென்றுபார்த்
தின்றெமதுபெருமானுக் கிசைந்தவாமிவையென்றார். (௧௫)

கல்லையினிற்றேன்வார்த்துக் கலந்துசுவைபடவூனை
யொல்லைநதிச்சென்றுவாய் நிரம்பநீர்கொண்டோடி
வில்லைவிடாதெம்மருங்கும் வெட்சிமுதற்பூக்கொய்து
நல்லவர்தாங்குஞ்சிமேற் கொடுநடந்தார்நலைநீங்க. (௧௬)

கன்றைநினைந்துளங்குழைந்து கதறுமான்போற்கதறிக்
குன்றினமுடிக்கொழுந்தாகுஞ் சிவக்கொழுந்தைமுன்குறுகி
நின்றனையேதுணையின்றி நெடுவனையிலந்தோநான்
இன்றன்றோவிதுகண்டே னெனவுருகியிரங்கினார். (௧௭)

சந்தமறையாகமங்கள் சாற்றுமுறைப்படிபூசை
முந்துசிவகோசரியார் முடிக்கணிந்தமலர்யாவும்
தந்திருத்தாளணிந்தசெருப் பான்மாற்றித்தம்வாய்நீர்
அந்தமிலான்முடிமிசையன் புமிழ்வார்போலாட்டினார். (௧௮)

குஞ்சிமிசைக்கொடுவந்த குற்றமில்பள்ளித்தாம
மஞ்சிவருங்காளத்தி மலைக்கொழுந்தின்முடிச்சாத்தி
விஞ்சுநறுந்தேன்கலந்த வியனமுதூன்கல்லையினைச்
செஞ்சரணம்பணிந்தரனார் திருமுன்புவைத்துரைப்பார். (௧௯)

இனிக்குமிதுமென்றுசுவை பார்த்தேனிவ்வூனமுதம்
மனக்கினியாய்த்தேன்கலந்த மாமிசமிதுவல்லையின்
றனக்காகப்பதமறிந்து கொடுவந்தேன்றோழாம
லனற்சுடுகைமாறாம லருந்துகவென்றருத்தினார். (௨௦)

அருத்தியபின்காளத்தி யப்பர்மருங்குறநின்று
வருத்துமேகினைவிலங்கு வகையெனவன்றிரவெல்லாம்
பருத்தசிலைகையேந்திப் பார்த்தவிழிமாறாமல்
கருத்தொருமித்தகலாத காட்சியுறவைகினார். (௨௧)

அன்றிரவுகழிந்ததற்பி னந்தர்திருமுகநோக்கி
யென்றுணையேநீதனித்திங் கிருக்கவோநானிசையேன்
சென்றிதோவருகின்றேனெ னிகழ்வேட்டைமுடித்துன்பா
லொன்றியநினைப்பக்கமு முன்வேண்டாவோவெனவுரைப்பார்.

உரைத்தெழுந்துசிறிதகல்வா ருன்மத்தர்போலிருப்பார்
சிரித்திடுவாரமீள்வாரொன் செல்வமேயெனவணைவார்
கருத்துநிகழ்ந்திடவேட்டை கருதிநடப்பார்பின்னு
திருத்தர்கழனியினைந்தணுகி நீங்காமனினறிடுவார். (௨௩)

தம்பெருமான்பசிநினைந்து தளர்வெய்தியினித்தாழே
னெம்பெருமான்றனக்கிறைச்சி யினியபலகொணர்வேனென்
றும்பர்தொழுமன்பரகன் றுயர்கானம்படர்ந்தெங்கா
யம்பொடுவில்லனுந்தாங்கி யணிவேட்டையாடுவார். (௨௪)

வேடுவர்தம்பெருமானார் வேட்டைவிழைந்தேகலுமுன்
கூடியமெய்ப்பூசைபுரி கொள்கையுடையந்தணனார்
காடியடைந்தம்மருங்கு காயடியுமிறைச்சியுங்கண்
டோடியுணர்வழிந்தொதுங்கி யுன்மத்தராயினார். (௨௫)

விதிப்படிநானருச்சித்த மேன்மைகுலைந்திடவீங்கு
மிதித்தெலும்புபடவீழ்த்தி வேடுவரோயிதுசெய்தா
ரிதற்கினிச்செய்திடுவதென னெனப்புனிதவினையோய்பித்
துதிக்குமறையாகமங்க டொகுத்தவருச்சனைமுடித்தார். (௨௬)

அன்பர்சிவகோசரியா ரால்றசிவபூசைமுடித்
தின்பமுறப்பணிந்தினியவ வநுசிதங்களெதிர்தோன்றில்
வன்பழிநின்றனக்கேதான் வந்துறுமெம்வாழ்வேயென்
றென்புருகிப்போயினர்மற் றிசைவேடர்செயல்மொழிவாம். ()

வனம்புக்குமரையேனங் கொன்றுதழன்மடுப்பித்து
முனம்போலப்பதமாக்கித் தேன்வார்த்துமுன்கொண்டு
மனந்தூய்மைகொண்டவர்வாய் மஞ்சனமுங்கொண்டுமுடிக்
கினஞ்சேருமென்மலர்தங் குஞ்சிமிசையேற்றடைந்தார். (௨௮)

அன்புமிகுதிண்ணனா ரான்றசிவகோசரியார்
முன்புபுரிபூசனையை மாற்றியேமுன்போலப்
பொன்புரையுங்காளத்திப் புண்ணியனார்பூசைமுடித்
தின்பமுறவருத்தினா ரிரலைமுதலூனமுதம். (௨௯)

இப்படியேநாடோறு மியற்றுவாருணுறக்கந்
தப்புதலுமோரார்தந் தலைவனார்தமையூட்டி

மப்பரிசொன்றேயறிவா ராறுநாள்கழிந்திடலு
மொப்பிலவர்செயலறியா வந்தணர்தாமிடருழந்தார். (௩௦)

வேடுவர்செயதுசிதங்கள் விலக்கலறியேனீது
காடவோவுளந்தரியே னயகனோகனைதீர்த்துக்
கூடுமருள்செய்திடெனக் கும்பிட்டப்பூசைனைசெய்
நீடியநான்மறையோர்தா மேகினார்தமதுறையில். (௩௧)

வேறு.

அன்றிரவிலந்தணர்தங்கனவில்வேடத்
தருமப்பொருளாயவிறைவனுரைசெய்வான்
[illegible]
மெய்யன்பன்பென்றுமறியாய்
[illegible]
[illegible]
மொன்றுமயலின்றி [illegible]
யுரைத்தருளிமீளவுமொன்றுரைக்கலுற்றான் (௩௨)

காளையவனசெயல்காட்டுவொளிந்திருந்தா
னயபக்கலவனபரிவுகாணபாயனறு
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
கும்பிட்டடங்கொளித்திருந்தாருதைந்துவிநோரா. (௩௩)

அந்தணரியவாறிருப்பவிலேயமாக
ணிவேட்டைமுடித்தமுதான்கொண்டுவாய்நீர்
சிந்தைமகிழ்வுறக்கொணடுபள்ளித்தாமஞ்
சென்னியிற்செருக்கொண்டாலயஞ்சேர்வான்செந்நீ
ரெந்திழியக்கண்டசிவனார்தங்கண்ணேயில்
வாய்நீர்மஞ்சனஞ்சிதறப்பள்ளித்தாமஞ்
சிந்திடவூன்கலனையொடுவீழ்ந்தானெங்கள்
செல்வமேயெனப்பதைத்ததுச்சிந்தைசோர்வான். (௩௪)

கண்கணீரிறைப்பவெழுந்தோசனார்தங்
கண்ணில்வருஞ்சோரிதுடைத்தனர்தங்கையால்
புண்டருசெந்நீரில்லாதொழுகக்கண்டு
புலம்பினார்நெடிதுயிர்த்துப்புவியில்வீழ்ந்தார்
மீண்டோடிக்குன்றமிசையீதுசெய்தார்
வேடுவரோவிலங்கினமோவென்றுசூழ்ந்து
தின்படைகொண்டெம்மருங்குந்தேடிக்காணார்
செல்வமறையோர்பயந்திகைத்தாரன்றே. (௩௫)

எம்மருங்குந்தேடியயர்வெய்தியீச
னிருக்குமிடத்தணைந்துருகியேழைபோனின
றம்மருங்குப்பரன்மேனியணைத்துக்கட்டி
யழுதுபுரண்டோயாமலவசமாகிக்
கைம்மருங்கிற்சிலைவீழநடந்துகாணிற்
கண்மருந்துபலதேடிப்பிசைந்துவார்ப்பா
ரிம்மருங்கென்றுழாதேசோரிவீழ்வ
தெனக்கலங்கியென்செய்தாற்றீருமென்பார். (௧௬)

வேறு.

எண்ணினருணுக்கேனை யிடுதலென்றிசைக்குமாத்தை
துண்ணெனவெழுந்தாய்ப்பாற் றேன்டிறாதயங்கவொன்றை
யண்ணலார்கண்ணிலப்பி யாடிறாசோரிநிற்கும்
வண்ணமேகண்டாரின்ப வாரிதிகண்டாரன்றே. (௧௭)

துள்ளினார்தோள்கள்கொட்டிச் சூழ்த்தனர்குருதிநின்ற
துள்ளினரங்குமிங்கு மோடினரேறப்பாய்ந்தார்
தள்ளினர்துன்பவெள்ளந் தமக்கெதிரொருவரின்றி
யெள்ளினர்வேடர்தம்மை யேந்திழைத்தமையைகது. (௧௮)

இவ்வகையிறும்பூதெய்தி யிருத்தலுமன்பரீசன்
செவ்வியவிடக்கண்டன்னிற் சொரிந்ததுசெந்நீர்கண்டா
ரெவ்விடர்வரினுமென்னை யிடந்தப்பக்கண்ணொன்றுண்டா
லிவ்விடர்தனக்கோவஞ்சு வேன்மருந்திதுவேயென்றார் (௧௯)

மருந்திலாதவர்போற்கெட்டேன் மயங்கவேயானனைநெஞ்சி
லிருந்திமறைக்கண்ணை யிடர்தப்பவென்றுங்காலைத
திருந்துசீரன்பருஞ் செருப்புடையிடக்காலூன்றிப்
பொருந்தவேகண்டாரீசன் புண்டருகண்ணிதென்றே. (௨௦)

அம்பினாலன்பர்தங்கண் ணிடந்திடத்தரியாராகி
யெம்பிரான்றிருக்காளத்தி யேந்தலாரன்பர்கையைத்
தம்பரிவதனாற்பற்றித் தடுத்தனர்தடுக்குமுன்மா
லம்பர்வாக்கெழுந்ததென்கண் ணப்பநின்றிடுகவென்றே. (௨௧)

பிடித்தகைவிடாமலன்பர் பெருமையைமுனிவர்தேற
வடித்தலமுதலிங்கா தமர்கவென்வலத்திலென்று
படித்தருள்புரிந்தாரொல்கு பைங்கொடியிடத்தார்தேவ
ரொடித்தனர்மலர்கள்வி யிருகரமேத்திநின்றே. (௨௨)

திருச்சிற்றம்பலம்.

மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்